www.padippakam.com

# செங்கொடி இயக்கத்தின் காலக்கண்ணாடி

## தோழர் பி.சுந்தரையா

V.R. பொம்மா ரெட்டி
M. அனுமந்த ராவ்

மொழியாக்கம் - பதிப்பாசிரியர்
சொ.பிரபாகரன்

SOUTH VISION

சவுத் விஷன்



படிப்பகம்

www.padippakam.com

Sengodi Iyakkathin Kaalakkanaadi P. Sundarayya

V.R. Bomma Reddy

V. Hanumantha Rao

Translated and Edited by C.Prabakaran

First Edition : May 2012

This edition is published in May 2012 on the occasion of the Birth Centenary Celebration of Com.P.Sundarayya under a special arrangement with the

'the Social Science Collective.'

Published by:

South Vision

132/251, Avvai Shanmugam Salai

Goapalpuram, Chennai – 6000086

Peoples' Publishing Price

Pages: 32

Rs 10.00

மககள் பதிப்பு விலை

பக்கங்கள்: 32

ரூபாய் 10.00

செங்கொடி இயக்கத்தின் காலக்கண்ணாடி

பி. சுந்தரையா

V.R. பொம்மா ரெட்டி

M. அனுமந்த ராவ்

மொழியாக்கம் - பதிப்பாசிரியர் : சொ. பிரபாகரன்

முதற் பதிப்பு : மே 2012

இந்தப் பதிப்பு மே 2012ல் தோழர் பி.சுந்தரையா நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தை ஒட்டி 'சமூக அறிவியல் கூட்டிணை'வின் ஏற்பாட்டுடன் வெளியிடப்படுகிறது.

வெளியீடு :

சவுத் விஷன்

132/251, அவ்வை சண்முகம் சாலை

கோபாலபுரம், சென்னை 600086



படிப்பகம்

இந்தப் பிரதி ′சமூக அறிவியல் கூட்டிணைவு′ என்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டின் பேரில் வெளியிடப்படும் மக்கள் பதிப்பாகும். ஒடுக்கப் பட்டவர்களின் நிலைமைகளை ஊடுருவி அறிந்து ஆற்றலூட்டும் செயல்ஊக்கியாக வினைபுரியும் நோக்குடன், ஒரு கூட்டு சமூகப் புரிதலை உருவாக்கவும், அடிப்படை விசயங்களில் விவாதங்களைத் தூண்டுவத்றகும் தன்னைச் சமர்பித்துக் கொண்ட அமைப்புதான் இந்தச் சமூக அறவியல் கூட்டிணைவு ஆகும். ஒடுக்கப்பட்டவர்களின் நலன் கள் மற்றும் விசயங்களை மையப்படுத்தி, சமூக அறிவியல் மற்றும் மானுடவியல் துறைகிளல், கூட்டு ஆராய்ச்சி,புத்தக வெளியீடுகள் மற்றும் ஆதரா விசயங்களைப் பரப்புதல் போன்ற வேலைகளையும், முன்முயற்சிகளையும் முன்னெடுத்துச் செல்ல இந்த அறக்கட்டளை முயலும். இந்த அறக்கட்டளை அதன் ஆதார படைப்புகளை சமூகத்தி லுள்ள அனைத்துத் தரப்பினரும் பெற முடிந்த விலையில் தருவதற்கு உளப்பூர்வமாக முயற்சிக்கும்.

This imprint is a special low priced edition, in arrangement with ′THE SOCIAL SCIENCE COLLECTIVE′, a Trust dedicated to encourage dialogue on issues that require collective understanding, in order to intervene and act as a catalyst in changing the conditions of the oppressed. The Trust would try to promote relevant initiatives and activities intended to focus on th issues and interests of the oppressed, through collective research, publications and dissemination of resources in social sciences and the humanities. The Trust would consciously strive to make its resources affordable to people from all sections of society.

# ஒரு சில வார்த்தைகள்

1974ல் கொல்கத்தாவில் நடைபெற்ற இந்திய மாணவர் சங்கத்தின் (SFI) இரண்டாவது அகில இந்திய மாநாட்டில், நான் பார்வையாளராய் பங்குப் பெற்றேன். அம்மாநாட்டைத் துவக்கி வைத்து, பி.சுந்தரையா பேருரையாற்றினார். அம்மாநாடு பல முக்கியத்துவத்தைப் பெற்றதாக, இன்னும் சிலரால் போற்றப்படுகிறது. அரசியல் தத்துவார்த்த நடை முறைகளை கொள்கைகளை அலச முயலும் எவருக்கும், அவரது துவக்கவுரையின் முக்கியத்துவம் புரியாமல் போகாது.

பிறகு 1975-77ம் ஆண்டில் அனைறைய பிரதமர் இந்திரா காந்தியால் பிறபிக்கப்பட்ட அவசர காலச் சட்டம், அதன் முற்பொழுதில் தமிழ கத்தில் திராவிட முன்னேற்ற கழக ஆட்சியில் இருந்ததினால், அவசர காலச் சட்டத்தின் கோர முகத்தைக் காணும் வாய்ப்பு நமக்குக் கிட்டாமல் போய் விட்டது. இந்தக் காலக்கட்டத்தில்தான் இந்திய மாணவர் சங்கத்தின் மத்திய நிர்வாகக் குழு கூட்டம், சென்னையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் பங்குப் பெறுவதற்காக தோழர் சுந்தரையா சென்னை வந்திருந்தார். அவரை அழைத்து வருவதற்காகச் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திற்குச் சென்றேன். அவர் கையில் ஒரு துணிப்பையையும், கைஇடுக்கில் ஒரு தலையணையையும் வைத்துக் கொண்டு ரயில் பெட்டியில் இருந்து இறங்கினார். நான் அவரிடம் போய், “தோழர் நான் பையை எடுத்து வருகிறேன்,” என்று கேட்டேன். அதை அவர் மிகப் பவ்வியமாக ″வேண்டாம்,” என்று சொல்லி, மறுத்து விட்டார். அவரது எளிமையும், பண்பும், என்னை மெய்சிலிர்க்க வைத்தது.

சென்னை கிருத்துவக் கல்லூரி மாணவர் மதன் மோகன் ராவ். பின்பு இந்திய மாணவர் சங்கத்தின் ஆந்திர மாநில தலைவராக செயல்பட்டவர். ஒருநாள் தோழர் மதன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) ஆந்திர மாநில குழு அலுவலகம் சென்று தோழர் பி.சுந்தரையாவிடம் பேசிவிட்டு புறப்படும் போது, மதனைப் பார்த்து ″எப்படி வந்தீர்கள்?” என்று சுந்தரையா கேட்டார். அதற்கு மதன் ″இரண்டு சக்கர வாகனத்தில் வந்தேன்,” என்று பதிலளித்தார். “அப்படி என்றால் தலைக்கவசம் (helmet) எங்கே?” என்று கேட்டார். மதன் ″இது என்னுடைய வாகனம் இல்லை,” என்றார். “எவ்வளவு நாளைக்கு ஒருமுறை இந்த வாகனத்தைப் பயன்படுத்துகிறீர்கள்?” என்று சுந்தரையா கேட்டார். “வாரத்திற்கு இரண்டு, மூன்று நாட்கள் இந்த



படிப்பகம்

வாகனத்தைப் பயன் படுத்துகிறேன்" என்று மதன் பதிலளித்தார். "அப்படியென்றால் ஹெல்மெட் ஒன்றை வாங்கி போட்டுக் கொண்டு வாகனத்தை ஓட்டுங்கள்," என்று பி.எஸ். அறிவுறுத்தினார். "சரி," என்று சொல்லி மதன் புறப்பட்ட போது, "ஹெல்மெட் வாங்க கையில் காசு இருக்கிறதா?" என்று வினவினார். இல்லை என மதன் கூற, "நான் ஹெல்மெட் வாங்க பணம் கடனாய் தருகிறேன். பின்னர் அதைத் திருப்பித் தந்து விட வேண்டும்," என்று கூறி பணத்தைக் கொடுத்தார் கொடுக்கும் போது, ஐ.எஸ்.ஐ தரச்சான்றிதழ் பெற்ற ஹெல்மெட்டை வாங்கும் படி, அத்தோழரிடம் திட்டவட்டமாகச் சொன்னார்.

தோழர் சுந்தரையா. ஊழியர்களை எப்படி அன்பாக கையாள வேண்டும் என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணம். இப்படி ஏராளமான விசயங்கள் அவரது வாழ்வில் பரவிக் கிடக்கின்றன.

எவ்வளவோ விசயங்கள் கட்சி ரகசியம் எனக் கருதி வெளியே கூறப் படாமல் உள்ளன. 21ஆம் நூற்றாண்டில் இந்த வழிமுறை சரிதானா என்று பரிசீலிக்க வேண்டிய அவசியத்திற்கு நாம் தள்ளப்பட்டு இருக்கிறோம். இணைய தளத்தில் பி.சுந்தரையாவின் "நான் ஏன் அரசியல் தலைமைக்குழுவில் இருந்து ராஜினாமா செய்கிறேன்?"என்ற கடிதம் வெளியிடப்பட்டுள்ளது. உலகமே அதை வாசிக்கிறது. அதன் சாராம்சம் என்ன, அதன் தத்துவ-அரசியல், கொள்கை-நடைமுறை என் னென்ன என்பதையெல்லாம் அக்கடிதம் விவாதிக்கிறது. நமது கட்சித் தலைமையின் கருத்து இது பற்றி என்ன என்பதைப் பற்றி இன்னும் கட்சித தோழர்களுக்கு விளக்கங்கள் அளிக்கப்படாமல் இருப்பது, கட்சியில், தத்துவார்த்த அரசியல் குழப்பங்கள் வருவதற்கும் வளர்வதற்கும், வழி அமைப்பதாக அமையும்.

அவருடைய முழுமையான வாழ்க்கை சரிதம் மட்டும்தான் இதற்கு மட்டுமல்ல, இன்னும் பல விசயங்களில் தெளிவை ஏற்படுத்தும். அதுதான் கட்சியைப் பலப்படுத்தும், வளர்த்தெடுக்கும்.

இரண்டு பாகங்களைக் கொண்ட அவரது 'புரட்சிப்பாதையில் எனது பயணம்' என்று நூலில் கூட, சொல்லப்பட்டிருப்பது கடலில் ஒரு துளிதான். அவருடைய முழுமையான வாழ்க்கை வரலாறு எழுதப் படும் போது மட்டுமே, அவர் வாழ்ந்த வாழ்க்கைக்கும், செங்கொடி இயக்கங்களின் தியாகங்களுக்கும் மரியாதை செலுத்துவதாக அமை யும்.

எம்.பாலாஜி

ஏப்ரல்: 30, 2012 சமூக அறிவியல் கூட்டிணைவு

## பதிப்புரை

எம்.பாலாஜி அவர்களுக்கு, நான் தொழிற்சங்கப் பணியைப் பார்ப்பதில் அவ்வளவாகப் பிரியம் கிடையாது. நாங்கள் டாக்டர் நார் மன் பெத்யூன் வாழ்க்கையைத் தமிழில் மொழிபெயர்த்துப் பதிப்பித்தப் போதே, சுந்தரையா குறித்தும், ஒரு நல்ல புத்தகத்தைத் தமிழில் கொண்டு வர வேண்டுமென வலியுறுத்திக் கொண்டே இருந்தார்.

2008ல், லக்னோவிலிருந்து தூத்துக்குடிக்குத் திரும்பியதும், பலபேரி டம் இருந்த, பல்வேறு கோபதாபங்களினால், நான் சங்கத் தேர்தலில் நின்று வெற்றியும் பெற்று விட்டேன். என்னுடைய குவிமையம் தொழிற்சங்கம் கிடையாது என்றும், நான் சமூகத்திற்குப் பயன்படும் வகையில் எனது திறனை வெளிப்படுத்த வேண்டுமானால், தொழிற் சங்கத்தைக் காட்டிலும், எழுத்துத் துறையில் பாரிய கவனம் செலுத்த வேண்டுமென பாலாஜி வலியுறுத்தி வந்தார். அவரைப் பொறுத்த வரை, எழுத்துத் துறைக்காக அவரால் பயிற்றுவிக்கப்பட்டவன் நான். லக்னோ விலிருந்த போதாவது, நாங்கள் மூன்று மாதங்களுக்கு ஒருமுறையாவது, நேரில் சந்தித்து அளாவளாவுதற்கு வாய்ப்பு கண்டிப்பாகக் கிட்டும். ஆனால் தூத்துக்குடிக்கு வந்த பிறகு, வருடத்திற்கு ஒருமுறை பார்ப்பது கூட, குதிரைக் கொம்பாகப் போய் விட்டது.

தொழிற்சங்கப் பொறுப்பை எடுத்தப்போது, இரண்டு வேலைகள் எங்கள் முன்னால் இருந்தது. மூன்று வருடங்களாக ஓடாமல் கிடந்த ஆலையை இயங்க வைத்து, சம்பள உயர்வு ஒப்பந்தமும் போட வேண்டும். இந்த வேலையை ஒரு வருடத்தில் முடித்து விடலாம் என்றுதான் சங்கப் பொறுப்பை ஏற்றுக் கொண்டாலும், அது மூன்றரை வருட காலத்தைச் சாப்பிட்டு விட்டது. இடைபட்ட காலத்தில் கோதாவரி பாருலேகர் பற்றிய ஒரு சிறு குறிப்பை மொழிபெயர்த்த வேலையும், 2011ல் தினமணி நடத்திய சிறுகதைப் போட்டியில் முதல்பரிசு வென்றது மட்டுமே, நான் எழுத்துத் துறையில் செய்த வேலைகள்.

இந்த வருடம் தொழிற்சங்க தலைமைப் பொறுப்பை விட்டு விலகி யதும், செய்த முதற் காரியம் www.socialsciencecollective.org என்ற வலைத் தளத்தைத் தோழர்களுடன் சேர்ந்து நிறுவியதுதான். இட துசாரிகளுக்குத் தேவையான தகவல்களஞ்சியமாக அதை மாற்ற வேண் டுமானால், அதற்கு இன்னும் செய்ய வேண்டிய காரியங்கள் ஏராளமாக உள்ளன, பலரது ஒத்துழைப்பும் தேவைப்படுகிறது. தொடர்ந்து சுந்த ரையாவின் நூற்றாண்டு வருகிறது என்பது தெரிந்ததும், அவரைப் பற்றி

யும், அவரது பணிகளைப் பற்றியும், இளைஞர்களிடம் கொண்டு செல்வது உடனடி அவசியம் என்பது புரிந்தது. காந்தியின் பாசறையில் இருந்த வந்த சுந்தரையா, எப்படி ஒரு துலங்கும் அப்பழுக்கற்ற கம்யூனிஸ்டாக திகழ்ந்தார் என்பதை, இன்றைய இளந்தலை முறையினர் தெரிந்து கொள்ள வேண்டும். சுந்தரையா மறைந்த போது, விஜய வாடாவே ஸ்தம்பித்து நின்றது. என் வாழ்வில், இத்தனை நன்றியுடன் நினைக்கப்பட்ட பாட்டாளி வர்க்க தலைவனைக் கண்டதே இல்லை. அங்கே எல்லா நிறுவனங்களும் அன்று மூடப்பட்டு, அவர் உடலுக்கு யார் யாரோ வந்து மலர்மாலை அணிவித்துத் தங்கள் கடைசி கௌரவத்தைச் செய்தார்கள்.

இப்படிப் பட்டவர்கள் கம்யூனிஸ்டாக இருந்தார்கள், காந்தியத்தை விட கம்யூனிசம்தான் நமது சுதந்திரத்திற்கு உண்மையான அர்த்தத்தைக் கொடுக்க முடியுமென அந்தக் கம்யூனிஸ்ட்கள் கருதினார்கள் என்பது, நமது இளைய தலைமுறையினருக்குத் தெரிய வேண்டாமா? ஏன் அப் படிச் சுந்தரையா கருதினார் என்பதை அறிவதற்கு, நாம் சுந்தரை யாவைக் கற்க வேண்டும். அப்படிக் கற்பதுதான், இந்தியா எதிர்கா லத்தில் எப்படி இருக்க வேண்டும் என்று நாம் சரியாக கனவு காணுவ தற்கு கூட, உதவிகரமாக இருக்கும்.

தோழர்களே! நமது வரலாறுதான் நமது உந்துசக்தி! ஆகவே வரலாறுதான் நமது எதிர்காலம். வரலாறு தெரியாதவர்களுக்கு எதிர்காலம் கிடையாது. ஆகவேதான் நாம் வரலாற்றுக்குப் பின் ஓடிக் கொண்டிருக்கிறோம். முதலாளிகள், வரலாற்றுக்குப் பின்னால் மட்டுமில்லை, எதன் பின்னாலும் ஓடாதீர்கள், சுதந்திராக இருங்கள் என்கிறார்கள். நமக்காகவும் சேர்த்து ஓடும் வேலையை முதலாளிகள் பார்த்துக் கொள்வார்களாம்.

ஆனால் நமக்கு இப்போது தேவை, வரலாற்றை முன்னெடுத்து செல்வது. வரலாற்றுக்குப் பின்னால் ஓடியவர்கள்தான், வரலாற்றை முன்னெடுத்துச் செல்ல முடியும். வரலாற்றை முன்னெடுத்துச் செல்பவர்களின் வரலாறுதான் பேசப்படும்.

இவண்,

சொ.பிரபாகரன்

*4/230-14, சுந்தரம் நகர்*

*முத்தையாபுரம் (தபால்)*

*தூத்துக்குடி - 628 005*

*கைப்பேசி: 9487847594*

# செங்கொடி இயக்கத்தின் காலக்கண்ணாடி
# தோழர் பி.சுந்தரையா

தோழர் பி.எஸ். என்றுதான் சுந்தரையாவைக் கட்சித் தோழர்களும், கட்சியின் பகுதிநேர, முழுநேர ஊழியர்களும் அறிவார்கள். கட்சி வட்டா ரத்திற்கு வெளியே, கட்சிக்கு நெருக்கமானவர்கள், அவரைக் கம்யூ னிஸ்ட் ரிஷி எனக் கொண்டாடுவார்கள். ஆனால் கோடிக்கணக்கான சாதாரண மக்களுக்கு, தங்களுக்காகப் போராடிய சுந்தரையாகாருதான் அவர்.

இப்போது தோழர் சுந்தரையா நம்முடன் இல்லை. 1985ம் ஆண்டு, மே 19ம் நாள்தான், அவர் நம்முடன் இருந்த கடைசி நாள். இருப்பினும் அவர் இன்றும், அனைவரது மனதிலும் உயிர்ப்புடன்தான் உள்ளார். மக்களது மனதிலும், எண்ணங்களிலும் நீங்காது வாழ்கிறார்.

ஒரு சோவியத் எழுத்தாளர் சொன்னார்: "உயிரினங்களி லேயே, மானுட வாழ்க்கைதான் அனைத்திலும் மேன்மையானது. அந்த மானுட வாழ்க்கையையும், ஒருவர் சக மனிதனின் சுபவாழ்வுக்காகச் சிந்தித்து, தனது சிந்தனையின் பலன்களை, தன் திறமைக்கு இயன்ற அளவுக்குச் சிறப்பாக நடைமுறைப்படுத்த முடிந்து, அதையும் தான் உயிருடன் இருக்கும் கடைசித் தருணங்களில் திருப்திகரமாக நினைவு கூர்ந்து சொல்ல முடிந்தால், அப்படிப்பட்டவர்தான் ஆசிர்வதிக்கப் பட்டவர்."

அந்த மாதிரியான அளவுகோல்களில் பார்த்தால், சுந்தரையா சந்தோ சமான நிறைவான வாழ்க்கை வாழ்ந்துதான் காலமாகி இருக்கிறார். இருப் பினும் இன்னமும் தான் செய்ய வேண்டியது ஏராளமாய் பாக்கி உள் ளதே, அதை நிறை வேற்றுவதற்குள் சீக்கிரமாகவே விடைபெற்று செல் கிறோமே என்று அவர் மகிழ்ச்சியற்றவராகவும் இறந்திருக்கக்கூடும்.

அவரது கனவுகளை நிறைவேற்றும் பொருட்டும், அவர் கையில் எடுத்துக்கொண்டு இன்னும் தீர்வுக்குக் கொண்டு வராத செயற்பா டுகளை நிறைவேற்றும் பொருட்டும், சிகப்புக் கொடியைத் தோளில் சுமந்து முன்னேறிச் செல்வது தான், தன்னலமற்ற அந்தத் தலைவருக்கு நாம் ஒவ்வொரு வரும் சமர்பிக்கும் அஞ்சலி ஆகும்.

தங்கக் கரண்டியில் உண்ட வசதிப் படைத்த செல்வந்தர் குடும்பத்தில் பிறந்திருந்தாலும், ஏழைகளின் மீது பரிவு, சேவை செய்வதில் வற்றாத ஆர்வம், தேசப்பற்று போன்றவைகள், அவரது இரத்தத்தில் ஊறியி ருந்தது. பூக்கள் விரிந்ததும், தனது மணத்தை எங்கும் பரப்புவது போல, குழந்தைப் பருவத்திலேயே அவர் தனது குணத்தைக் காட்ட ஆரம்பித்து விட்டார். அவரை மாதிரி செல்வந்த

பின்புலத்தை உடைய குழந்தை களைப் போலல்லாமல், அவர்களிடம் இருந்து காத தூரம் விலகி, வித்தி யாசமாய் காணப்பட்டார். இளம் வயதிலேயே அவர் படிப்பு மேல் செலுத்தியக் கவனமும், அவரது ஒழுக்கச்சீலமும், யாரையும் வியப்பில் ஆழ்த்தும். அவரது அக்கா, தனது சொந்தக் குழந்தைகளைப் பார்த்து, சுந்தரையா (மாமா)வின் வாழ்க்கையின் பழக்க வழக்கங்களில் ஏதாவது ஒன்றைப் பற்றிக் கொண்டு, பின் தொடருமாறு கேட்டுக் கொள்வாராம்.

அவரது அக்கா எடுத்துரைத்த ஒரு சம்வத்தைப் பாருங்களேன்: அவரது கிராமத்தின் அரிஜன குடியிருப்பில், மளிகைக்கடை எதுவும் இல்லை. ஆகவே அந்தக் கிராமத்தில் இருந்த ஒரேயொரு கடைக்குத் தாழ்த்தப்பட்டவர்கள் வந்து, தங்களுக்குத் தேவையான சாமான்களை அதிக விலை கொடுத்துதான் வாங்கிச் செல்ல வேண்டிய கட்டாயம் இருந்தது. ஆகவே சுந்தரையா நெல்லூருக்கு நேரடியாகச் சைக்கிளில் சென்று, அவர்களுக்குத் தேவையான பொருட் ளை வாங்கி வந்து, ஒரு கடையைத் திறந்து, அதை நெல்லூர் விலைக்கே விற்பார்.

இந்த மாதிரி வேலைகளைச் செய்தாலும், அவர் ஒரு புத்தகப்புழு. அவரது நடவடிக்கைகளை அவதானித்த அவரது மச்சினர் சொல்கிறார்: அவனுக்கு மட்டும் கொஞ்சம் வயது அதிகமிருந்திருந்தால்(சொன்ன வருடம் 1921, அப்போது அவருக்கு வயது 8), அவன் பெரிய தேசத் தலைவனாகி இருந்து இருப்பான்.

14ம் வயது இருக்கும் போதே, காங்கிரஸ் மகாசபை கூட்டத்தில் கலந்து கொள்ள, சென்னைச் சென்றார். சென்று, 'சைமனே திரும்பிப் போ!' போராட்டத்திலும், அப்போராட்டத்தை முன்நிறுத்தி நடந்த ஹர் தாலிலும் கலந்து கொண்டார். அப்போது வருடம் 1921.

1930ல் காந்தியின் அழைப்பை ஏற்று, தனது படிப்பைப் பாதியிலேயே மூட்டைக் கட்டி வைத்து விட்டு, மேற்குக் கோதாவரி மாவட்டத்திலுள்ள பீமாவரத்தில் சுதந்திர போராட்ட இயக்கத்தில் பங்கெ டுக்க, அம்மாவிற்குக் கடிதம் எழுதி தகவல் தெரிவித்து விட்டுச் சென் றார். அங்குச் சத்தியாகிரகப் போராட்டத்தில் கலந்து கொண்டார். அவரது கட்டுப்பாடு, அர்ப்பணிப்பு, உறுதிப்பாடு அனைத்தும், அவர் கலந்து கொண்ட போராட்டப்பாசறையில் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தின. அவர் ஒருங்கே பெரியவர்கள்- இளைஞர்கள் மத்தியிலும், பெரும் புள்ளி-சாதாரணவர்கள் மத்தியிலும் மதிப்பையும் மரியாதையையும் பெற்றார்.

அருகிலுள்ள எல்.பி.சார்லா கிராமத்தில், சுந்தரையா உடற்பயிற்சி செய்வதற்காகத் தொண்டர்களைத் திரட்டி னார். உடற்பயிற்சி செய்யும் போது, அங்குள்ள ஒருவர் வெளியே உள்ளவர்களுடன் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டார். அவரை உடனே வெளியே வரும்படி அழைத்தச் சுந்தரையா, உடற்பயிற்சி முகாமிற்கான கட்டுப்பாடுகளை

மீறுவது கூடாது எனக் கடுமையாக எச்சரித்தார். அப்படி எச்சரிக்கப் பட்டவர் சாதாரண ஆளில்லை. 60 வயது பூர்த்தியான பூபதி சோமராசு ஆவார். அப்போது சுந்தரையாவுக்கு 17 வயது கூட ஆகவில்லை. கடந்த காலத்தில், நமது தலைவர்கள் அவ்வளவு தூரம் பெரும் ஒழுக்கச்சீலர்களாக இருந்து இருக்கிறார்கள். அதனால்தான் சோமராசுக்கு சுந்தரையா மீது கோபம் வரவில்லை. மாறாக இந்த இளம்வயதிலேயே கட்டுப்பாட்டில் இவ்வளவு உறுதி யாக இருந்தமை அவரைக் கவர்ந்தது. அதற்காக இளைய தலைவர் சுந்தரையாவை சோமராசு மனமாரப் பாராட்டினார்.

இளம் சுந்தரையாவை மேலும் சரியாகப் புரிந்து கொள்ள, மேலும் ஒரு உதாரணத்தைக் கூறலாம். முகாமிலிருந்த நூற்றுக்கணக்கான தொண்டர்கள், எப்போது வேண்டு மானாலும் தங்கள் முகாமைச் சுற்றி யுள்ள எந்த இடங்க ளிலும், தங்கள் உடற்கடன்களைத் தீர்த்துக் கொள் ளலாம். இது முகாமைச் சுற்றியுள்ள அனைத்துப் பகுதியையும் அசுத்த படுத்தி விட்டது. இதைச் சரி செய்ய சுந்தரையா எவ்வளவோ முயற் சித்தும், ஒன்றும் சரியாகவில்லை. கடைசியாக சுந்தரையா ஒரு கொத்து கோடாரியைக் கையில் எடுத்துக் கொண்டு, அனைத்தையும் கொத்திப் புரட்டி, மூடி, இடத் தையே தலைகீழாகச் சுத்தமாக்கி விட்டார். அதைக் கண்டதும், மறுபடியும் அங்குக் கட்டுப்பாடும் ஒழுக்கமும் நிலை நிறுத் தப்பட்டது. அசுத்தமாக்கும் பேச்சுக்கே இடமில்லை.

சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்டமைக்காக, அரசு அவரைக் கைது செய்து, அவருக்கு இரண்டு ஆண்டு சிறை வாசம் விதித்தது. அவர் சிறுவனாய் இருந்த காரணத்தால், சிறுவர் சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்ப பட்டார். இருப்பினும் சிறைச்சாலையில் அரசியல்கைதிகளை அவமான படுத்தும் செயலைக் காணும் போது, அவரது இளம் இரத்தம் கொதிக் கும். அரசியல் கைதிகளுக்கு எதிராக செய்யப் படும் கொடுமைக ளுக்காக, அவர் இருமுறை உண்ணாவிரதம் இருந்தார்.

கட்டுப்பாடு மிக்க அவரது வாழ்க்கையை, மற்றுமொரு உதாரணம் முலம், எடைப் போட்டுப் பார்க்கலாம். அவருக்கு எந்தக் கெட்டப் பழக்கமும் கிடையாது. குறைந்த பட்சம் புகைப்பிடிப்பது, காபி, தேனீர் அருந்தும் பழக்கம் கூட அவரிடம் அறவே கிடையாது. அவர் இரண்டு உணவுகளுக்கு நடுவில், எதையும் எடுத்துக் கொள்ள மாட்டார். ஆனால் அவர் உணவு உட்கொள்ளும் போது, போதுமான அளவு கணிசமாக உண்பார். அவர் உணவு விடுதிகளில் சாப்பிடும் போது, எக்கச்சக்கமாகச் சாப்பிடுகிறார் என்று உணவு விடுதியின் முதலாளிகள் அவருக்கு உணவு பரிமாறும் போது கோபமாகவே இருப்பார்கள். கட்சிக் குடும்பங்களில் அவருக்குக் காலைச்சிற்றுண்டியோ அல்லது வேறு ஏதாவது பலாகாரமோ தந்தால், அதை எப்போதும் நளினமாய்

மறுத்து விடுவார். அவற்றைத் தனது காலை உணவுடனோ அல்லது மதிய உணவுடனே தந்தால் சாப்பிடு வேன் என்பார்.

சிறையில் இருந்து விடுதலையானதும், சுந்தரையா நேராகப் போய், சுதந்திரப் போராட்டத்தில்தான், மறுபடியும் குதித்தார். அவர் விவசாயத் தொழிலாளர்களைத் திரட்டுவதில் ஆர்வம் காட்டினார். விவசாயத் தொழி லாளர்கள் பெரும்பாலும் தாழ்த்தப்பட்டவர்களாய் இருந்தனர். ஆகவே தீண்டாமைக்கு எதிராக போராடி, இயக்கத்தைக் கட்டினார். அவரது ஆர்வம், அர்பணிப்புடன் கூடிய செயற்பாடு ஆகியவற்றை விதந்து நோக்கிய மாவட்ட காங்கிரஸ், மேலும் பல தொண்டு முகாம்களை நடத்தும் பொறுப்பை, அவரிடம் ஒப்படைத்தது. இந்தத் தொண்டு முகாம்களில் அவர் பார்த்த வேலைகள்தான், அவரைக் காங்கிரஸின் தொண்டு நிறுவனத்திற்குத் துணை அதிகாரியாக நியமிக்க காங்கிரஸ் தலைமையை உந்தித் தள்ளியது. 1933ல் காந்தி ஆந்திராவுக்கு விஜயம் செய்யும்போது, அவர் தலைமையிலான இந்தத் தொண்டு நிறுவனங் கள்தான், தொண்டர்களைத் திரட் டும் பணியை மேற்கொண்டது.

அவர்கள் தொடுத்த ஒத்துழையாமை இயக்கம், தோல்வியுற்றது. இது சுந்தரையா போன்ற இளைஞர்களுக்குப் பெரும் ஏமாற்றமாக அமைந்தது. அவர்கள் தங்களது இலட்சியமான, சுதந்திரத்திற்கான மாற்று வழிக்கான பாதைகளைத் தேட ஆரம்பித்தார்கள். ஏகாதிபத்திய வாதிகளை இந்த மாதிரி யான சாத்வீகமான வழிமுறைகளைப் பின்பற்றி, தூக்கி எறிய முடியாது என்ற மாற்று எண்ணம், அவரது மனதில் ஓடத் துவங்கியது.

அவர் பெங்களூரில் இருந்த காலத்தில் பயின்ற மார்க்சிய இலக்கி யங்களும், ரஷ்ய புரட்சி குறித்த இலக்கியங்களும், அவரது கருத்தைக் கவரத் துவங்கியது. அவரைப் போலவே, பல இளைஞர்கள் இப்படிப் பட்ட கருத்தால் கவரப்பட்டார்கள். அவர்கள் வெறும் சுதந்திரம் என்பது பயன்தராது என்ற முடிவுக்கும் வந்திருந்தார்கள். அனைவருக்கும் சம வாய்ப்பும், வறுமை, கல்வியின்மை போன்றவற்றில் இருந்து விடுதலையும் தரவல்ல சோசலிச அமைப்புதான், மனிதனின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு வாய்ப்புகளை உறுதிசெய்யும் என்று சுந்தரையா நம்பினார். இந்தக் காலக்கட்டத்தில்தான், சுந்தரையா அமீர் ஹைதர்கான் என்பவருடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டார். அவர் தெற்கில் கம்யூ னிஸ்ட் கட்சியை நிர்மாணிக்க அனுப்பப்பட்டிருந்தார்.

இங்கே ஒரு சுவாரசியமான உண்மைச் சம்பவம் ஒன்று சொல்ல வேண்டியுள்ளது. ஹைதர்கான், சுந்தரையா பெங்க ளூரில் இருக்கிறார் என்பதைக் கேள்விப்பட்டு, அவர் விலா சம் கண்டுப்பிடித்து, சந்திக்கச் சென்றார். அவரது அறையின் கதவைத் தட்டினார். "இது எனது படிப்பு நேரம். இப்போது யாரையும் பார்க்க, என்னால் நேரம் ஒதுக்க முடி யாது.

மன்னித்து விடுங்கள்," என்று கதவைத் திறக்காமலேயே சுந்த ரையா அவரை அனுப்பி விட்டாராம். இந்தக் கதவைத் திறக்காத இளஞ் சிறுவன் சுந்தரையாதான், பின்னர் கம்யூனிஸ்ட் கட்சியை ஸ்தாபித்து, அதை வளர்த்தெடுத்தவராகவும், அதை ஒன்று திரட்டியவராகவும், அதன் தலைவராகவும் இருந்தார். கம்யூனிஸ்ட் கட்சியின் பிறப்புக்கான முதல் வித்து ஆந்திரபிரதேசத்தில் இப்படிதான் ஊன்றப்பட்டது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சிக்கு எதிராக, ஆத்திரம், வங்கா ளத்திலுள்ள பல தேசபக்த இளைஞர்கள் தவிர்க்க முடியாதபடி, தீவிர வாதத்தைக் கையில் எடுத்தார்கள். இந்தியாவில் ஏகாதிபத்திய ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கத் தீவிரவாதத்தால் இயலாது என்பதையும், மக் கள் இயக்கத்தைக் கட்டி, அதில் பெருந்திரளாய் வெகுஜனங்களை உணர்வுப் பூர்வமாய் திரளச்செய்தால்தான், சுதந்திரம் பெற முடியும் என்பதையும், அந்த வங்காள ஆந்திர தேசப்பக்தர்களுக்கு விளக்கிப் புரிய வைக்கும் பொறுப்பு, சுந்தரையாவின் தலையில் விழுந்தது.

1934ம் ஆண்டு துவங்கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சிக்கு, மேற்படி வங்காள, ஆந்திர தோழர்களை மடைமாற்றம் செய்து வென்று எடுத்துக் கட்சியில் இணைப்பதுதான் அவரது இலட்சியமாக அப்போது இருந் தது. இந்தக் காலக் கட்டத்தில், கம்யூனிஸ்ட் கட்சியுடனான அவரது வேலை, அவர் காங்கிரஸ் கட்சியில் இணைந்து உக்கிரமாகப் பணியாற் றுவதற்கு எந்தத் தடையாகவும் இருக்கவில்லை. அவர் காங்கிரஸ் கொடி யின் கீழ் பார்த்த பொறுப்பான பணிகள், அவர் மாநில காங்கிரஸில் உறுப்பினராய் இடம் பெறுவதையும், அகில இந்திய காங்கிரஸில் உறுப்பினராய் இடம் பெறுவதையும், அந்த வருடமே உறுதி செய்தன.

அதற்குப் பிறகு அவருடைய பணிகளில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது. சுந்தரையா கம்யூனிஸ்ட் அறிக்கையை தெலுங்கில் மொழிபெயர்த்து, அதை அச்சிட்டுப் பதிப்பித்தார். அதைத் தொடர்ந்து, காங்கிரஸ் சோசலிச கட்சித் துவங்கப்பட்டு, சுந்தரையா அதன் ஆந்திர மாநிலத்தின் பொதுச் செயலாளராய் பல ஆண்டுகள் இருந்தார். இந்தக் காலக் கட்டத்தில்தான் சுந்தரையா ஜெயபிரகாஷ் நாரயணுடன் சேர்ந்து கொண்டு, ஆந்திராவின் அத்தனை மாவட்டங்களிலும் பயணம் செய்து, காங்கிரஸ் சோசலிச கட்சியை வலுவாகக் கட்டினார்.

சுந்தரையா சோசலிச கட்சியைக் கட்டிக் கொண்டிருக்க, ஆந்திராவின் அண்டை மாநிலங்களான தமிழ்நாட்டிலும், கேரளாவிலும் கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்டும் பொறுப்பும், அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அப்போது காங்கிரஸிற்குள் இடதுசாரிகளாக பணியாற்றிக் கொண்டி ருந்த கேரளாவைச் சார்ந்த கிருஷ்ண பிள்ளையுடனும், நம்பூதிரி பாத்துடனும், தமிழ்நாட்டைச் சார்ந்த

பி.ராமமூர்த்தியுடனும் தொடர்பு களை ஏற்படுத்திக் கொண்டார். அது 1935ன் மத்தியப்பகுதி காலமாகும்.

சுந்தரையாவுடனான தனது முதல் சந்திப்பை, இ.எம்.எஸ். நம்பூதிரி பாத் அற்புதமாக விவரிக்கிறார்: "நானும் கிருஷ்ணபிள்ளையும் சுந்தரை யாவை முதல் முதலாகச் சந்தித்ததை மறக்கவே முடியாது. அச்சந்திப்பு அழியாத தாக்கத்தை எங்களுக்குள் ஏற்படுத்தியது. அவர் சிரம் முதல் பாதம் வரை ஒரு உண்மையான புரட்சிக்காரர். அவரது எளிமை, அரசியல் விசயங்கள் குறித்த தீர்க்கமான நிலைபாடுகள், மற்றவர்களது கருத்துகளைப் பொறுமையாக கேட்கும் குணம், மற்றவர்களது பிரச் சினைகளைப் புரிந்து கொள்ள முயலும் போக்கு, அப்பிரச்சினைகளில் இருந்த அவர்களை மீட்க எப்போதும் தயாராகவும் ஆர்வத்துடனும் உதவ முன்வருவது போன்ற பலவித அவரது குணாம்சங்கள், எங்களது மனதுக்குள் அழியாத தடத்தை ஏற்படுத்தி விட்டது. சாவு அவரை எங்களிடம் இருந்து பிரிக்கும் வரை, அவரைச் சந்திக்கும் ஒவ்வொரு போதும், எங்களுக்கு எப்போதும் அந்த உணர்வுதான், அவரைப் பற்றி இருந்தது."

77 வயது பாஷியம் அய்யங்கார் என்பவர்தான் சென்னையில் சுந்த ரையாவின் முதல் தொடர்பாளர் ஆவார். அவர் சுந்தரையாவின் ஆரம்ப கால சென்னைச் சந்திப்பின் போது, சுந்தரையாவிடம் ராமமூர்த்தியைப் பற்றி சொன்னா ராம். ராமமூர்த்தியின் சுதந்திரப் போராட்ட ஆர்வத்தை யும், போராட்டத்தினால் சிறைச்சாலை சென்றதையும், அவருக்குள்ள இடதுசாரி சார்பையும் பற்றி விபரமாகச் சொன்னா ராம். அதைக் கேட்ட சுந்தரையா கார்க்கியின் "தாய்" நாவலை பாஷியத்திடம் கொடுத்து, அதை ராமமூர்த்தியிடம் கொண்டு சேர்த்து, அதைத் தமிழில் மொழி பெயர்க்கும் படி வேண்டுகோள் விடுக்கச் சொன்னாராம்.

கிட்டதட்ட இந்தக் காலக்கட்டத்தில்தான் கிஷான் மற்றும் தொழிற் சங்க அமைப்புகளை கட்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மறு குடியமர்வுத் சட்டத்தைத் தடைச் செய்ய வேண்மென்ற கோரிக்கை, காங்கிரஸ் வலுவாக உள்ள சிகார் மாவட்டத்தில், கடுமையாக எழுந்தது. அப்போது பெரும் தலைவர்களாக இருந்த கொம்மாரெட்டி சத்திய நாராயணா, நந்துரி பிரசாத ராவ், சாலாசனி வாசு தேவராவ் போன்ற வர்களுடன் சேர்ந்து, கிஷான் சபாவைக் கட்டும் முயற்சியில் இருந்த சுந்தரையாவுக்கு, இது ஒரு வாய்ப்பாக அமைந்து விட்டது. சிரிகாகுளம் மாவட்டத்திலுள்ள இச்சாசாப்புரத்திலிருந்து, சென்னை வரை, அவர்கள் 1500 மைல்கள் பயணம் செய்து, 1500 கிராமங்களுக்குச் சென்று, விவசாயிகளின் பெரும் யாத்ரையை நடத்திக் காட்டினார்கள். இதுதான் ஆந்திராவில் கிஷான் சபாவை அமைக்க அடித்தளமிட்டது.

1937ம் ஆண்டு தேர்தலில், நீதிக்கட்சித் தோற்கடிக்கப்பட்டு, காங்கி ரஸ் கட்சி வெற்றி வாகைச் சூடியது. அனைவரைக் காட்டிலும், அந்த வெற்றிக்கு அயராது உழைத்தக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், பி.சுந்தரையாக்கும்தான் நன்றி கூறியாக வேண்டி இருந்தது.

அந்தத் தேர்தலின் போது, அரசுக்கு எதிராகக் கருத்துகள் கூறியதற்காக குற்றம் சாட்டப்பட்டு, சுந்தரையா சிறைச் சாலைக்கு அனுப்பப்பட்டார்.

காங்கிரஸ் கட்சியிலும், கம்யூனிஸ்ட் கட்சியிலும் ஒரே நேரத்தில் உறுப்பினராக இருந்தவர் சுந்தரையா. அது எந்த வித பாதிப்பும் இல்லாது தொடர்ந்தது. 1938லும், 1939லும் அவர் அகில இந்திய காங்கி ரஸ் கமிட்டிக்கு மீண்டும் தேர்ந் தெடுக்கப்பட்டார். அப்படி இருந்த போதிலும், முதலில் மேற்கு கோதாவரி மாவட்டத்திலுள்ள காளியா பட்டிணத்திலும், அதைத் தொடர்ந்து குண்டூர் மாவட்டத்திலுள்ள மன்த னவிப்பள்ளத்திலும், கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான ஊழியர் களுக்கு மார்க்சிய வகுப்புகளை எடுத்தார்.

1939ல் உலகப்போர் வெடித்த போது, கம்யூனிஸ்ட்கள் மீதும், இடதுசாரிகள் மீதும் அடக்குமுறையை, பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் கட்டவிழ்த்து விட்டார்கள். பலர் கைது செய்யப்பட்டனர். சுந்தரையா கைது செய்யப்படுவதிலி ருந்து தப்பித்து விட்டார். காவல் துறையினர் பெரும் சன்மா னம் தருகிறோம் என்று அறிவித்துப் பல முயற்சிகளை மேற் கொண்ட போதும், அவர்களால் எதுவும் செய்ய முடிய வில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றை சொல்வது அவசிய மாகிறது. அவர் சிறப்பாகச் சைக்கிள் ஓட்டக் கூடியவர். அவர் பலமுறை நெல்லூரிலி ருந்து சென்னைக்குச் சர்வ சாதா ரணமாய் சைக்கிளிலேயே வந்து விடு வார். அவரைக் காவல்துறையினர் சைக்கிளில் பின்தொடர்ந்து வந்து பிடிக்க முயன்றாலும், அவரது வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல், சோர்ந்து போவார்கள். மெதுவாக செல்லும் படி, அவர்கள் சுந்தரை யாவிடம் வேண்டுகோள் விடுப்பார்கள்.

அவர் தலைமறைவாக இருந்த போது, “சுதந்திர பாரத்” என்று கம்யூ னிஸ்ட் சஞ்சிகையைத் துவங்கினார். அதை மிகவும் ரகசியமாக விநியோ கித்தார்.

ஒரு சமயம் அவர் குணடக்கல்-மர்மகோவா மார்க்கமாகச் சென்று கொண்டிருந்தார். அப்போது லோண்டா ரயில்வே நிலையத்தில் போலிஸ் அவரைப் பிடித்து விட்டார்கள். ஆனால் அப்போது சப் இன் ஸ்பெக்டரும், போலிஸிகளுக்கும் ஏதோ விவாதம் ஏற்பட்டு நடந்து கொண்டிருக்க, சுந்தரையா அவர்களிடமிருந்த தப்பித்து விட்டார். அவர் காட்டுக்குள் தப்பிச் சென்றதோடு மட்டுமல்லாது, தன்னைப் பின் தொடர்ந்து வந்த காவல்துறையினரையும் ஏமாற்றி விட்டு, தான் அடைய வேண்டிய இலக்கைச் சரியாகச் சென்றடைந்தார். அதற்குப்

பிறகு, மூன்று ஆண்டுகள் கழித்து, 1942ல் கம்யூனிஸ்ட் கட்சியின் மேல் விதித்திருந்தத் தடை நீக்கிய பிறகே, அவரது நடமாட்டத்தைக் காண முடிந்தது.

ஆரம்ப காலங்களிலேயே, அவர் தனது சாதிய அடையாளங்களைக் களைந்து எறிந்தார். சாதிய அடையாளம் தாங்கி நிற்கும் தனது சுந்தர ராமிரெட்டி என்ற பெயரை, சுந்தரையா என்று மாற்றி வைத்துக் கொண் டார். பின்னர், அவர் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்து விட்டதால், தனது தம்பி ராமசந்திர ரெட்டியுடன் சேர்ந்து, தங்களது பங்குச் சொத்தை விற்றுக் கிடைத்தப் பணத்தைக் கொண்டு, கம்யூனிஸ்ட் இயக்கத்தைக் கட்டுவதற்கு முழுவதுமாய் செலவழித்தார். இதனால் இயக்கத்துடன் சுயமாய் கரைந்து போகும் போக்கும், தியாகமும், பெரும் மரபாய் கம்யூனிஸ்ட் கட்சியில் தொடர்ந்தது. பல்வேறு கட்சித் தலைவர்களும், ஊழியர்களும் இதே போக்கைத் தொடர்ந்து கடைபிடித்தனர்.

கம்யூனிஸ்ட் கட்சியின் மீதிருந்த தடை நீக்கப்பட்டதும், காங்கிரஸ் சோசலிச கட்சியில் இருந்த அனைவரும் கம்யூனிஸ்ட் கட்சியில் வந்து இணைந்து கொண்டார்கள். கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து கொண்டே மக்களிடம் பணி புரியத் துவங்கினார்கள். முதன்முறையாக, பிரஜாசக்தி என்று கம்யூனிச வாராந்திரி துவங்கப்பட்டது. அதன் பதிப்பாளர் போர் டில் சுந்தரையாவுக்கும், ஒரு இடம் கொடுக்கப்பட்டது. இப்படி மெள்ள ஆரம்பித்து, நாளாக நாளாக கணிசமான நேரத்தை ஆந்திராவில் கிஷான் மற்றும் கம்யூனிஸ்ட் இயக் கத்தைக் கட்டுவதிலேயே அவர் செலவழித்தார். ஆந்திரா விற்கு வரும் முன்னர், மும்பையில் தனது கணிசமான நேரத்தை சுந்தரையா செலவழித்தார். (கட்சி மும்பையைத் தலைமையகமாக கொண்டு அப்போது செயற்பட்டது) மும்பையில், பொதுவாக இந்தியா முழுவதுக்குமான கம்யூனிஸ்ட் இயக்கம் கட்டுவதைக் கொண்டு சிந்தித்து இயங்கினாலும், குறிப்பாக ஆந்திராவில் வலுவான கம்யூனிஸ்ட் இயக்கம் கட்டுவதற்கு முழுமுயற்சி எடுத்து உழைப்பார்.

தோழர் ஹரிகிஷன் சுர்ஜித் சொன்னது போல, விவசாயப்புரட்சியில் விவசாயத் தொழிலாள இயக்கத்திற்கு உள்ள முக்கியத்துவத்தை உணர்ந்த கொண்ட ஒருசில முதல் தலைமுறை கம்யூனிஸ்ட் தலை வர்களில் சுந்தரையாவும் ஒருவர் என்பது சரிதான். சுந்தரையாதான் நமது நாட்டில் முதன்முறையாக விவசாயத் தொழிலாளர்களின் சங்கத் தைக் கட்டியவர். ரஷ்யாவைப் போல் தொழிலாளர்களைக் கொண்டு நமது நாட்டில் புரட்சியை நடத்த முடியாது என்ற உணர்வுடன், இந்திய புரட்சியில் விவசாயிகளும் கிராமத்து ஏழைகளும் பெரும் பாத்திரம் வகிக்க வேண்டியிருக்கும் என்ற நம்பிக்கையுடன் இருந்தவர் சுந்தரையா. இந்தப் புரிதலின் அடிப்படையில், 1944-லேயே முதல் அகில இந்திய கிஷான் சபா மாநாட்டை விஜயவாடாவில் கூட்டினார்.

அப்போதுதான் முதன்முறையாக கம்யூனிஸ்ட்களின் தொண்டர்களைத் திரட்டும் திறன், பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அதில் அவர்கள் வியக்கத்தக்க வண்ணம், சிறப்பாக செயலாற்றினார்கள். மாநாட்டிற்கு வெகுதிரளாய் கூடியிருந்த விவசாயக் கூலித் தொழிலாளர்களின், ஏழை விவசாயிகளின் பெருங்கூட்டம், பொதுவாக இந்தியாவில், குறிப்பாக ஆந்திராவில், கம்யூனிஸ்ட்களின் செல்வாக்குப் பெருகி இருப்பதற்குப் பறைச் சாற்றியது.

அப்போது வளர்ந்து வரும் கம்யூனிச இயக்கத்தின் தாக்கத்தை எங்கும் உணர முடிந்தது வாஸ்தவம்தான். ஆனாலும் கம்யூனிஸ்ட் கட்சி, அப்போது பிறந்த குழந்தை மாதிரி ஆரம்ப நிலையில்தான் இருந்தது. கட்சி தன்முன் உள்ள சவாலை எதிர்கொள்ளும் அளவுக்கு, போதுமான ஊழியர்களையும் தொண்டர்களையும் கொண்டிருக்க வில்லை. ஆகவே வளர்ந்திருந்த கம்யூனிச இயக்கத்தின் தாக்கத்தைக் கொண்டு, விவசாயிகள், விவசாய தொழிளார்கள், இளைஞர்கள், பெண்கள், முற்போக்கு எழுத்தாளர்கள் என்று பல்வேறு வழிகளில் வெகுஜனங்களைத் திரட்ட இயலவில்லை. இப்படி ஏற்பட்டிருந்த பெரும் இடைவெளியை, பிரஜாசக்திதான் நிரப்பியது. 1945ல் சுந்தரையாவின் பெருமுயற்சியால், பிரஜாசக்தி நாளிதழாக மாற்றப் பட்டது. சுந்தரையா அந்த நாளிதழுக்காக ஒரு இடத்தை வாங்கி, அங்கி ருந்து அது இயங்குவதற்குத் தேவையான அனைத்து முன்முயற்சி களையும் மேற்கொண்டார். அதற்காக வெளியாட்களிடம் வாங்கிய நன்கொடையைத் தவிர்த்து, கட்சிக் குடும்பங்களில் இருந்தும் பெரும் தொகையை நன்கொடையையாகப் பெற வேண்டி இருந்தது.

முதன்முறையாக கம்யூனிஸ்ட்கள் 1946 பொதுத்தேர்தலில் தங்களது சொந்தப் பெயரிலேயே போட்டியிட்டுப் பார்த்தார்கள். சுந்தரையா கிருஷ்ணா மாவட்டத்தில் போட்டியிட்டார். அப்போதைய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளராய் இருந்த பி.சி.ஜோசி அவர்களுடன் சேர்ந்து, அந்த மாவட்டம் முழுதும் சுற்றி, கம்யூனிஸ்ட் கட்சியின் அரசி யல் நிலைபாடு என்ன என்பதை, எங்கும் சுந்தரையா பரவச் செய்தார்.

தேர்தலுக்குப் பிந்தைய காலத்தில், அப்போதைய ஹைதராபாத் மாநிலத்தின் ஒரு மண்டலமாக இருந்த தெலங்கானா பகுதியில் இருந்த தெலுங்கு மகாசபாவுடன் கூடிய தொடர்பு, மேலும் வலுவானது. சுந்தரையா ஹைதராபாத் நிஜாமின் நிலபிரபுத்துவ ஆட்சிக்கு எதிரான போராட்டத்தை, இன்னும் வலுவாக்க, அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டார். அந்தப் போராட்டம், ஒரே நேரத்தில் நிஜாமுக்கு எதிராகவும், அதே சமயம் அனைத்துத் தெலுங்குப் பேசும் மக்களுக்கும் ஒரே மாநிலம்தான் என்ற இரண்டு கோரிக்கையை வைத்து, அதற்காக நின்றது. அந்தப் போராட்டத்தின் கோஷம் "பிரஜாராஜியத்திற்கான விசாலஆந்திரா" என்பதுதான். அதாவது அகண்ட ஆந்திராவில் மக்கள்

ஆட்சி மட்டுமே இருக்க வேண்டும் என்பதுதான் அந்தக் கோஷத்தின் உள்சாரடு. கம்யூனிஸ்ட்களால் எழுப்பப் பட்ட இந்தக் கோஷம், ஆந்திராவில் மட்டுமல்ல, இந்தியா முழுக்க எதிரொலிக்க ஆரம்பித்து விட்டது. 'பிரஜாராஜியத்திற்கான விசால ஆந்திரா' என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட பதிப்பகம், தெலுங்கு மற்றும் ஆங்கிலத்தில் தங்களது பதிப்புகளைக் கொண்டு வந்து, ஆந்திர மாநிலம் முழுவதும் மக்களைத் திரட்டியது. இப்போராட்டம்தான், இன்றைய ஆந்திர பிரதேசம் உருவா வதற்கான வழியை அடிகோலியது. அது மட்டுமல்லாது, இந்தியா முழு வதும், மொழிவாரி மாநிலங்களை உருவாக்க, ஆந்திரம் உருவானது அடிப்படையாக அமைந்தது.

ஆந்திராவிலும், தெலங்கானாவில் இருந்த இரண்டு இயக்கங்களை இணைத்து, ஆந்திரா மற்றும் தெலங்கானா நிலப்பிரவுத்துவத்தை எதிர்த்து பெரும் இயக்கமாக வளர்த்தெடுத்தது, சென்னையில் இருந்த காங்கிரஸிற்குப் பெரும் தலைவலி தரும் பிரச்சினையாக, மாறி விட்டது. கோபத்தில் அவர்கள் சுந்தரையாவை விரட்ட, அவர் தலைமறைவாக போக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. 1948ல் தலைமறைவானவர், பின்னர் 1952ல் ராஜிய சபாவுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் வரை, தலை மறைவு வாழ்க்கையைதான் தொடர வேண்டியிருந்தது. இந்தக் காலக் கட்டத்தில்தான், சுந்தரையாவால் தலைமைத் தாங்கப்பட்ட தெலங் கபனா போராட்டம், கம்யூனிஸ்ட் கட்சியின் வழிகாட்டுதலின் பேரில், நிலப்பிரபுத்துவ நிஜாமின் கொடுங்கோல் ஆட்சிக்கு எதிரான தனது வரலாற்றுப்பூர்வமாக முக்கியத்துவம் வாய்ந்த, வீரஞ்செறிந்த போராட் டத்தை நடத்தி முடித்திருந்தது.

எதனுடனும் ஒப்பிட்டுப் பார்க்க முடியாத படியான ஒரு வரலாற்றுப் பூர்வமான போராட்டம் தெலங்கானா போராட்டம். அது நிஜாமின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வர நடத்தப்பட்ட ஆயுதம் தாங்கிய போராட்டமாகும். அந்தப் போராட்டத்தின் போது, 4000க்கும் மேலான மக்களும், கட்சிஊழியர்களும் கொல்லப்பட்டார்கள். ஆயிரக்கணக் கானவர்கள் இதுவரைக்கும் கேட்டிராத கொடுமைகளுக்கு ஆளானார் கள். இந்தப் போராட்டத்தின் விளைவாகதான், கிட்டத்தட்ட பத்தாயிரம் கிராமங்களில் நீடித்திருந்த நிஜாம் ஆட்சி முடிவுக்குக் கொண்டு வரப் பட்டது. கூடவே பத்து லட்சம் ஏக்கருக்கு மேலான நிலங்கள் "சங்கம்" என்ற அமைப்பின் மூலம் நிலமற்ற ஏழைகளுக்குப் பகிர்ந்து அளிக்கப் பட்டது. ஆந்திர மகாசபாவும், கம்யூனிஸ்ட் கட்சியும், சுந்தரையாவும் அந்தப்போராட்டத்தின் முன்னோடிகளாக இருந்தார்கள். சுந்தரையா தெலங்கானா பகுதியின் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளராய் தேர்ந் தெடுக்கப் பட்டார்.

1952ல் சுதந்திர இந்தியாவின் முதல் பொதுத்தேர்தல் நடந்தது. ஆந்திராவிலும் தெலங்கானா பகுதிகளிலும் பல தொகுதிகளில் கம்யூ னிஸ்ட்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். கடந்த நான்கு வருடங்களாக நிஜாமின் நிலப்பிரபுத்துவ இராணுவத்தாலும், இந்திய இராணுவத்தாலும் கொடூரமான முறையில் நரவேட்டையாடப்பட்ட கம்யூனிஸ்ட்கள் தொலைந்தார்கள் என்று கருதியவர்களுக்கு, இந்தத் தேர்தல் அப்படி யில்லை என்ற உண்மையை அம்பலப்படுத்தியது.

அப்போது ஹைதராபாத்தில் மாநிலத்தில் இருந்த தெலங்கானா பகுதியில் கம்யூனிஸ்ட்கள் பெருவாரியாக வென்றிருந்த போதும், அந்த மாநிலத்தின் மரத்வாடா மற்றும் கர்நாடகா பகுதிகளில் காங்கிரஸ்காரர்கள் பெருவாரியாக தேர்தலில் வென்றிருந்ததால், கம்யூனிஸ்ட்கள் சொந்த மாக அரசு அமைக்கும் முயற்சியைக் காங்கிரஸ்காரர்கள் முறியடித்தனர்.

ஏற்கனவே சொன்னது போல, சுந்தரையா ராஜ்யசபாவுக்குத் தலை மறைவாய் இருந்த போதே, தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது பாரா ளுமன்றத்திற்கு, காங்கிரஸிற்கு அடுத்தப்படியாக கம்யூனிஸ்ட்கள் பெரு வாரியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தார்கள். ஆகவே கம்யூனிஸ்ட்கள் எதிர்கட்சியாக அங்கீகரிக்கப்பட்டார்கள். சுந்தரையாவை, பாராளு மன்றத்தில் தங்கள் தலைவராகத் தேர்ந்து எடுத்ததின் மூலம், கம்யூ னிஸ்ட் உறுப்பினர்கள் சுந்தரையாவின் திறனுக்கும் தியாகத்திற்கும் தங்களது காணிக்கையைச் செலுத்தினார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். சுந்தரையாவும் பாராளுமன்றத்தின் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் என்று பொறுப்பு கிடைத்து விட்டது என்று அமர்ந்து விடாமல், பாராளுமன்ற அவையில் நடக்கும் விவாதங்களில் மிகவும் துடிப்புடன் கலந்து கொண்டார். இதே கடமை உணர்வுடன், கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட்பீரோ உறுப்பினர் பொறுப்பையும் நிறைவேற்றினார். பாராளுமன்ற விவாதத்தில் உயிர் துடிப்புடன் கலந்து கொள்ளும் அவரது போக்கு, அவரது எளிமை, நேர்மை, நம்ப கத்தன்மை அனைத்தும் சேர்ந்து அவருக்குப் பெரும் பெயர் வாங்கித் தந்தது. டிரசரி பெஞ்சில் இருந்தவர்களாய் இருந்தாலும் சரி, எதிர்கட்சி யில் இருந்தவர்களாய் இருந்தாலும் சரி, அனைவருக்கும் அவரைப் பிடித்திருந்தது. அவரைக் கண்ணியத்துடன் பார்த்தார்கள்.

1955ல் நடந்த மாநில இடைக்காலத் தேர்தலில் ஆந்திராவில் காங்கிரஸ் தோல்வியுற்றது. அத்தேர்தலில், சுந்தரையா கண்ணாவரம் தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். அதைத் தொடர்ந்து அவர் தனது ராஜியசபா உறுப்பினர் பொறுப்பை ராஜினாமா செய்து விட்டு, மாநில அரசியல் நடவடிக்கைக்குத் திரும்பினார். அவர் ஆந்திர மாநிலத்திற்கும், பின்னர் ஆந்திர சட்டசபைக்கும் எதிர்கட்சித்

தலைவராக ஆனார். அது அவர் வகித்தப் பொறுப்பிற்கே பெருமை சேர்ப்பதாக அமைந்தது. அது வரைக்கும் காங்கிரஸின் மேலாண்மையில் இருந்த பொது கணக்குக் கமிட்டியின் சேர்மன் பொறுப்பு, முதன்முறையாக எதிர்கட்சித்தலைவரான சுந்தரையாவுக்குத் தரப்பட்டது. அவரது அந்தக் கம்பீரமும், நம்பகத்தன்மையும்தான், புதிய மரபுகளுக்கு வழிவகுத்தது. உண்மையில் மாநில சட்டசபை அவருக்குச் செலுத்திய காணிக்கையாக இதைக் கொள்ளலாம்..

சுந்தரையாவின் முழு குணாம்சத்தையும், பலவிதமான வித்தியா சமான பணிகள், வித்தியாசமான முறையில் மையப்படுத்தி முன்னுக்குக் கொண்டு வந்தது என்று சொல்லலாம். அது ஆயுதம் தாங்கிய போராட்டமாக இருக்கட்டும், அல்லது பாராளுமன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக இருக்கட்டும், அல்லது கட்சி மற்றும் வெகுஜன அரங்கங்களில் செய்ய வேண்டிய அமைப்புரீதியான பணியாக இருக்கட்டும், அனைத்திலும் அவர் முழுவதுமாய் முழுகிப் போய், நூறு சதவீத அர்ப்பணிப்புடன் பணிபுரிவார். மற்றொரு குறிப்பிடத்தக்க அவரது குணாம்சம், அவரது கடினஉழைப்பு. அதன் மூலமும், தளராத உழைப்பின் மூலமும், பிரச்சினையின் அடிப்படையைப் புரிந்து கொள்வார். பணி புரிவது, வேலை பார்ப்பது, தொடர்ந்து காரியமாற்றி கொண்டிருப்பது என்பதுதான், அவரது கூடப்பிறந்த குணங்கள். அவர் கட்சியின் எதிராளிகளுடன் சும்மா வாளைச் சுழற்றிக் கொண்டு சண்டைக்குக் கிளம்பி விட மாட்டார். பிரச்சினையின் அடிநாதத்தைக் கடுமையான முயற்சி எடுத்துக் கற்று, அப்பிரச்சினையில் தனக்கான சரியான அடித்தளம் இட்ட பின்புதான், எதிராளிகளுடன் பிணக்கு இருந்தால் முறித்துக் கொள்வார்.

உதாரணத்திற்கு குற்றவியல் திருத்த மசோதா பாராளுமன்றத்திற்குக் கொண்டு வரப்பட்ட போது நடந்த சம்பவங்களை எடுத்துக் கொள் வோம். அந்த விவாதத்தில் வழக்கறிஞர்களும், சட்டப் பிரச்சினைகளில் பழக்கம் உள்ளவர்களும்தான் எளிதாக எதிர் கொண்டார்கள். அதில் அவர்கள்தான் முடிவெடுக்கும் அதிகாரம் கொண்டவர் போல, விவா தத்தில் பங்கெடுக்க முடியும் என்பதாக இருந்தது நிலைமை. சுந்தரையா வும் சட்டத்தை மிகவும் உன்னிப்பாகக் கவனித்து, அவரும் பல திருத் தங்களை முன்மொழிய, பல நீதிமான்கள் ஆச்சரியத்தில் மூழ்கினர். அவ ரது செயல்பாடு ஒன்றும் இயல்புக்கு மாறானதல்ல. அவர் தலைமைத் தாங்கி நடத்திய மக்கள் இயக்கம்தான், இந்த மாதிரியான குற்றவியல் திருத்த மசோதாக்காளால் பெரிதும் பாதிக்கப்பட போகும் இயக்கங் களாகும். ஆகவே முறையற்ற திருத்தங்களை, அவருக்கு அடிமுதல் பாதம் வரை, உறுதியாக எதிர்க்க வேண்டிய கட்டாயம் இருந்தது.

ஒருமுறை, சுந்தரையா ஒருவருடன் கடுமையாக மோத வேண்டி ஆகிப்போனது. "ஆமாம், உமக்கு அரசியல் தெரியும், யாருக்கும் அதில்

சந்தேகம் இல்லை. ஆனால் இலக்கியம் பற்றி என்ன தெரியும்?" என்று அவர் கேட்டு விட்டார். உடன் 'நானய்யா'விலிருந்து, மிகவும் நவீன எழுததாளர்கள் வரை உட்கார்ந்து அவசர அவசரமாக படிக்க ஆரம்பித்து விட்டார். பெரும் பண்டிதர்களைப் பார்த்து தனக்கு ஏற்பட்ட சந்தேகங்களுக்கு விளக்கம் கேட்டுத் தெரிந்து கொண்டார். அதற்குப் பிறகுதான் அவரது மனது சமாதானம் அடைந்தது. தனது தனிப்பட்ட சேகரிப்புகளாக அவர் வைத்திருந்த ஆந்திர பிரதேசத்தின் உயிர்து டிப்பான படைப்புகள் மட்டுமே போதும், அவரது சிறந்த வாசிப்பிற்கு உராணங்களாக இருக்க..

சுந்தரையா தனது கட்சியின் மூத்த சகபாடிகளுடன் சேர்ந்து கொண்டு, கட்சிக்குள்ளிருந்த திருத்தல் வாத போக்குக்கு எதிராகவும், வர்க்க சமரசவாதிகளுக்கு எதிராகவும், சமரசமே செய்து கொள்ள முடியாத சண்டையை நடத்திக் கொண்டிருந்தார். 1961ல் நடந்த விஜய வாடா கட்சி மாநாட்டின் போது, இந்த விவாதம் முன்னுக்கு வந்தது. அது கட்சியையே உடைக்கும் நிலைக்குத் தள்ளியது. இருப்பினும் கட்சியின் ஒற்றுமையைக் கருத்தில் கொண்டு, கட்சி நலனுக்காக, சில ஒட்டு வேலைகளைச் செய்து சமரசம் கண்டனர்.

சுந்தரையாதான், மற்ற எந்தத் தோழரைக் காட்டிலும், கட்சியின் மத்தியக் கமிட்டியில் நீண்ட காலம் அங்கம் வகித்தவர் ஆவார். அவரால் கட்சியின் மத்திய தலைமையின் திருத்தல்வாதப் போக்கைச் சகித்துக் கொள்ள இயலவில்லை. அவர் விஜயவாடா காங்கிரஸிற்குப் பிறகு, மத்தியக் கமிட்டியில் இருக்க மறுத்து விட்டார். ஆனால் அப்போதுதான் பத்தாண்டு காலமாக கட்சியின் பொதுச்செயலாளராக இருந்த அஜய் கோஷ் காலமானதாலும், மத்தியக் குழுவிலுள்ள அனைத்து உறுப்பி னர்களும் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டதாலும், அவர் மத்திய கமிட்டி யிலும், மத்திய செயற்குழுவிலும் பணிபுரிய ஒப்புக் கொண்டார். இருப்பினும் சீக்கிரமே அவர் விடை பெற வேண்டிய தருணம் வந்தது. இந்திய-சீன எல்லைச் சண்டை வெடித்ததும், கட்சியின் தேசிய கவுன்சி லில் உள்ள பெரும்பான்மையானவர்கள், சீன எதிர்ப்பு நிலை எடுத்தார் கள். அதில் சிலர் சீனாவுடன் போரிடுவதற்காக அமெரிக்காவின் உதவி யைக் கூட நாடலாம் என்ற கூறினார்கள். சுந்தரையாவால் இந்த நிலை பாட்டை ஏற்றுக் கொள்ள இயலவில்லை. அவர் சில தோழர்களுடன் சேர்ந்து கொண்டு, செயற்குழுவில் இருந்தே விலகினார். அவர் விலகியதும், உடனே சுந்தரையாவும், ஒத்து வராத சில கட்சித் தலை வர்களும் கைது செய்யப்பட்டு, சீனக் கைக்கூலிகள் எனக் குற்றம் சாட்டப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

அவர் சிறையில் இருந்து விடுவிக்கப் பட்டதும், முதல் வேலையாகக் கட்சி செயற்பாட்டின் போது கடைபிடிக்க வேண்டிய, உண்மையான

மார்க்சிய சிந்தனைகளையும், அமைப்பியல் கொள்கைகளையும், அறிமுகப் படுத்தும் முயற்சிகளில் இறங்கினார். ஆனால் அந்த முயற்சி எதிர்பார்த்த பயன்களை அளிக்காததால், கட்சியின் திருத்தல்வாத தலைமையுடன் இருந்த உறவுகளை முறித்துக் கொண்டு, கட்சியைப் புதிதாக மறுநிர்மாணம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. 1964ல் கல்கத்தாவில் புதிய கட்சி மாநாடு கூட்டப்பட்டது. புதிய செயற்திட்டமும், புதிய கட்சிக் கொள்கைகளும் இந்த மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டன. சுந்தரையா ஏகமனதாக கட்சியின் பொதுச் செயலாளராய் தேர்ந்து எடுக்கப்பட்டு, பல வருடங்கள் அந்தப் பொறுப் பில் தொடர்ந்து இருந்தார்.

திருத்தல்வாத தலைமையில் இருந்து முறித்துக் கொண்ட பிறகு, பொலிட் பீரோ கூட்டம் கேரளாவில் நடந்தது. அந்தக் கூட்டம் நடந்து கொண்டிருந்த போது, அரசு திடீரென வந்து ஒட்டுமொத்த தலைமை யையும் கைது செய்து சிறையில் அடைத்தது. நாடு முழுவதும் ஆயிரக் கணக்கான மார்க்சிஸ்ட் தொண்டர்களும், ஊழியர்களும் கைது செய்யப் பட்டு சிறையில் அடைக்கப் பட்டனர். 1967 பொதுத்தேர்தலை ஒட்டி தான், அவர்கள் விடுவிக்கப் பட்டனர்.

சிறையில் இருந்து விடுதலையாகி வந்ததும், மறுபடியும் சுந்தரையா கட்சியைத் திரட்டுவதில் மூழ்கிப்போனார். மேற்கு வங்கத்திலும், கேரளா விலும் ஐக்கிய முன்னணி அரசு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் நிறுவப்பட்டது. நம்பூதிரிபாட் கேரள அரசுக்கும், ஜோதி பாசு மேற்கு வங்க அரசுக்கும் முதலமைச்சராக ஆனார்கள்.

கேரளா மற்றும் மேற்கு வங்கத்திலுள்ள மார்க்சிஸ்ட் கட்சிகள், பொது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், உழைக்கும் வர்க்கத் தினரையும், விவசாய மற்றும் மற்ற வெகுஜன இயக்கங்களையும், வலி மைப் படுத்துவதற்கும், முயற்சித்தார். கேரளாவிலேயே குறிப்பிட்ட காலம் தங்கியிருந்து, கேரளாவின் மீது சிறப்புக் கவனம் செலுத்தி வழி காட்டினார்.

சுந்தரையா இந்திய-சீனப் போரின் போது கைது செய்து வைத்தி ருந்த போது, கடுமையான உடல்நல பிரச்சினைக்கு, உள்ளானார். ஆகவே ஆந்திரப் பிரதேச அரசும், இந்திய அரசும் மாஸ்கோவிற்குச் சென்று சிகிச்சைப் பெற்று வர அவரை அனுமதித்தது. மாஸ்கோவில் சிகிச்சைப் பெற்று இந்தியா திரும்பியதும், அவர் மறுபடியும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

அவர் மாஸ்கோவில் சிகிச்சைப் பெற்று கொண்டிருந்த போதும் கூட, இந்தியாவிலுள்ள கட்சியின் மத்தியகமிட்டியுடன் தொடர்பு வைத்திருந் தார். சமகால விசயங்களில் தனது கருத்தைத் தெரிவிப்பதுடன், குறிப் பாக இந்தோ பாகிஸ்தான் பிரச்சினையில் சரியான நிலைபாடு எடுப்ப

www.padippakam.com

தற்கு உதவிகரமாக இருந்தார். மொத்தத்தில் கட்சியைச் சரியாக வழி நடத்திச் செல்வதற்கு, தன்னால் முடிந்த அனைத்தையும் செய்தார்.

மேற்கு வங்கம் மற்றும் கேரளாவில், மார்க்சிஸ்ட் கட்சி ஆட்சி புரிந்த போது, அதிதீவிர நிலைபாடு தலைத் தூக்கியது. அப்போதைய சீனா மற்றும் சோவியத் ரஷ்யாவிற்கு இடையேயுள்ள மோதல்கள் மற்றும் கருத்து வேறுபாடுகள், இந்த மாதிரியான போக்குக்கு வலு சேர்ப்பதாக இருந்தது.

1968ல் மத்திய கமிட்டியின் பிளீனம், மேற்கு வங்கத்திலுள்ள பர்த்து வானில் கூடி, தத்துவார்த்த பிரச்சினைகள் சம்பந்தமாக ஆழமான விவா தத்தை மேற்கொண்டது. அப்பிளீனம் நக்சல்பாரிகளின் வழியை முற்றி லுமாக நிராகரித்தது. கூடவே சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் வலது சாரி திருத்தல்வாத வழியையும், சீனாவின் இடதுசாரி சாகச வாதத்தை யும் எதிர்த்தது.

இந்திய நிலைமைகளுக்கும், அப்போதைய உலக நிலைமை களுக்கும் ஏற்ப மார்க்சிய லெனினிய வழிமுறையை, நடைமுறைப் படுத்த முடிவு செய்தது. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியையும், சீன கம்யூனிஸ்ட் கட்சியையும் ஒன்றாக இணைந்து வந்து, மார்க்சிய லெனி னிய சிந்தாந்த அடிப்படையிலும், தொழிலாள வர்க்க சர்வதேசியத்தின் அடிப்படையிலும், செயற்படுமாறு இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, வேண்டி கேட்டுக் கொண்டது. பிளீனத்தின் விவாதங்களிலும், முடிவுகளை எடுப்பதிலும், சுந்தரையா முக்கிய பாத்திரம் வகித்தார்.

சுந்தரையா மீண்டும் மீண்டும் கட்சியின் பொதுச் செயலாளராய் எர்ணாகுளத்தில் நடந்த எட்டாவது கட்சி மாநாட்டின் போதும், மதுரை யில் நடந்த ஒன்பதாம் மாநாட்டின் போதும், தேர்ந்தெடுக்கப்பட்டார். சுந்தரையா கட்சியின் பொதுச்செயலாளர் என்ற வகையில் தனது பொறுப்புகளைப் பூரணமாக நிறைவேற்றி தந்த போதிலும், கட்சியின் கிஷான் சபா குறித்தும், இந்திய மாணவர் சங்கம் (SFI) குறித்தும் விசேச கவனம் எடுத்துக் கொண்டு சிறந்த வழிகாட்டியாகச் செயற் பட்டார்.

பொதுச்செயலாளராய் இருந்த போது, தனது தலைமையின் கீழ், கியூபா, வடகொரியா மற்றும் ருமேனியா போன்ற நாடுகளுக்குப் கட்சி யின் பிரதிநிதிக் குழுக்களை அழைத்துச் சென்றார். ருமேனியாவிற்குச் சென்ற பிரதிநிதி குழுவில், ஆந்திரப் பிரதேச கட்சிக் கமிட்டியின் செயலா ளராய் இருந்த தோழர் ஹனுமந்த ராவும் கலந்து கொண்டார். அப்போது வியட்நாம், கியூபா, ஸ்பெயின், இத்தாலி, பிரான்ஸ், ஜப்பான் மற்றும் பல நாடுகளில் இருந்த வந்த பிரதிநிதிகளுடன் பேசும் வாய்ப்பும், அவர் களது கருத்தையும் அனுபவத்தையும் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பை யும், இந்தியக் குழுவின் பிரதிநிதிகளும் பெற்றனர்.



படிப்பகம்

அதற்கு முன்னர், நம்பூதிரிபாட் மற்றும் பி.சி.ஜோஷி அவ்களுடன் சேர்ந்து 1957ல் பீகிங் செல்லும் வாய்ப்பை, சுந்தரையா பெற்றார். சென்று சீனாவின் எட்டாவது கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டில் பங்குப் பெற்றார். அப்போது சுந்தரையா மாசேதுங், சூயன்லாய் போன்ற பல சர்வதேசிய கம்யூனிஸ்ட் தலைவர்களைச் சந்தித்து பல விசயங்கள் குறித்து விவாதித்தார். பிறகு சிறிது காலம் சீனாவிலேயே தங்கியிருந்து, சுற்றிப் பார்த்து, அவர்களது முன்னேற்றங்களையும் சாதனைகளையும் அலசி ஆராய்ந்து புரிந்து கொள்ள முனைந்தார்.

அவர் கட்சியை, மார்க்சிய லெனினிய சித்தாந்தத்திற்குப் புறம்பான தீவிரவாதத்தின் பக்கம் சாய்ந்து விடாமலும், கண்மூடித்தனமாகச் சீனாவை ஆதரிக்கும் போக்கை அண்ட விடாமலும், சரியான திசையில் வழி நடத்திச் சென்றார். 1975ல் இந்திராகாந்தி அவசர கால சட்டத்தின் மூலம் அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டு, மக்கள் இயக்கத்தின் மீது மிருகத்தனமான தாக்குதலைத் தொடுத்த போதும், ஆயிரக் கணக்கான கட்சியின் தலைவர்களையும் ஊழியர்களையும் கைது செய்த போதும், சுந்தரையா தலைமறைவாக இருந்து கொண்டு கட்சி யைத் திறம்பட வழி நடத்தியதோடு அல்லாமல், பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டதும் தலைமைமறைவு வாழ்கையை முடித்துக் கொண்டு வெளி வந்தார்.

தேர்தலில், காங்கிரஸிற்குக் கடுமையான தோல்வியைத் தந்து, ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்தது. அப்போது சுந்தரையா ஆந்திராவுக்குத் திரும்ப போய், அங்கேயுள்ள கட்சி வேலைகளைப் பார்க்க, விரும்பினார். அதன் விளைவாய் தனது பொதுச்செயலர் பொறுப்பை ராஜினாமா செய்தார். ஆனால் அதை நீண்ட காலமாக மத்திய கமிட்டி ஏற்கவில்லை. ஆனால் தான் எடுத்த நிலைபாட்டில் சுந்தரையா உறுதியாக இருந்தார். அவரால் தனது சொந்த மாநிலத்தில் கட்சியின் செல்வாக்கில் சரிவு ஏற்படுவதைப் பார்த்துக் கொண்டு, சும்மா இருக்க இயலவில்லை. இடது மற்றும் வலது திருத்தல்வாதங்களுக்கு நடுவே சிக்கித் தவிக்கும் ஆந்திர கட்சியைச் செம்மை படுத்தி, மீண்டும் மறுநிர்மாணம் செய்வது அவசியம் என கருதி, தனது நிலைபாட்டில் மிக உறுதியாக இருந்தார். கடைசியாக கட்சி வேறு வழியில்லாமல், அவரை அனைத்து அகில இந்திய பொறுப்புகளில் இருந்தும் விடுவித்தது. அவர் தொடர்ந்து பொலிட்பீரோவில் உறுப்பினராக இருந்தாலும், தனது பெரும் பகுதி நேரத்தை ஆந்திரத்திலேயே கழித்தார். நக்சலைட் என முத்திரைக் குத்தி நூற்றுக்கணக்கான மக்களைக் கொன்று குவித்த ஆந்திர முதலமைச்சர் வெங்கலராவுக்கு எதிராக, ஆந்திர மக்களை வெகுவாகத் திரட்டி, சிவில் விடுதலை இயக்கத்தைத் துவங்கினார். இந்த மக்களை கொன்றொழிக்கும்

போக்கைக் கண்டித்து, மாவட்டம் தழுவிய மாநாடு ஒன்றை நடத்தினார்.

அவர் தர்குண்டே கமிட்டியின் பரிந்துரையின் மேல் அமைக்கப் பட்ட பர்கவா கமிஷன் முன்னர், வேண்டுமென்றே திட்டமிட்டு நடந்த படுகொலைகள் குறித்து, சுந்தரையா நேரடியான சாட்சிகளைக் கொண்டு வந்து நிறுத்தினார்.

தெலங்கானா போராட்டம் பற்றியும் அவர் எழுதிய புத்தகம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அதைச் அச்சடித்து விநியோகிப்பது என்பது, மார்க்சிய லெனினியத்தின் நடைமுறை அரிச்சுவடியைப் படிப்பது போல உதவிகரமாக இருக்கும்.

## இணைப்பு

சுந்தரையாவின் நெருங்கிய நண்பர்களும், கட்சித் தலை வர்களும், ஊழியர்களும், சுந்தரையாவுடனான தங்கள் அனுபவங்களின் மூலம், அவரது மறைவுக்குப் பிறகு, எழுதிய சொற்பொழிவுகளில் இருந்தும், பத்திகளில் இருந் தும், எடுக்கப்பட்ட குறிப்பிட்ட பகுதிகள் இங்குத் தரப்பட் டுள்ளன. சுந்தரையாவின் ஆளுமையைப் புரிந்து கொள்ள இவை உதவும்:

"உலகத்தில் எங்கோ உள்ள ஒரு சிகரத்தின் உயரம் எவ்வளவு என்று நீங்கள் தெரிந்து கொள்ள விரும்பினால், நீங்கள் உங்கள் பூகோள புத்தகத்தைத் திருப்பிப் பார்க்க வேண்டாம். சுந்தரையாவைக் கேளுங் கள்! அவர் அதற்கான பதிலைச் சொலவார். ஆற்றில் தண்ணீர் எவ்வளவு வருகிறது, அதை ஒவ்வொரு மாநிலமும் எப்படிப் பிரித்துக் கொள்ள வேண்டும் என்பது போன்ற, சிக்கலான விசயங்களுக்கு திறந்த புத்தகம் போல பதில், அவர் தெரிந்து வைத்திருப்பார். கலை இலக்கியம் உட்பட, அவர் படிக்காத விசயம் என்று எதுவும் இருக்க முடியாது. உண்மையில் அவர் கலையில் பெரும் விருப்பம் கொண்ட பன்முக ஆளுமை கொண்ட ஒரு மனிதர். கலைகளைப் பற்றி தெரிந்து கொள்வற்காக, மிகவும் விலை உயர்ந்த புத்தகங்களை வாங்கி அடுக்கி வைத்திருந்தார். அவரைப் பார்த்தால் ஒரு அறிவுஜீவி என்று சொல்ல முடியாது. அவர் அப்படி ஒன்றும், மொத்த மொத்தமாகப் புத்தகங் களை எழுதிக் குவிக்கவில்லை. ஆனால் இயக்கத்தில் உள்ளவர்களுக்குத் தேவையான புத்தகங்கள் மட்டும் பல எழுதியுள்ளார்."

“குழந்தைகளைப் பெற்றுக் கொண்டால், தான் மக்களுக்குச் செய்யும் பணிகள் பாதிக்கப்படலாம் என அவர் அஞ்சினார். ஆகவே தான் திருமணம் செய்து கொண்ட உடன், குடும்பக்கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சைச் செய்து கொண்டார். அவர் வெறுமனே சுயநலமற்ற மனிதன் மட்டுமல்ல. தனது சொத்தை எல்லாம் கட்சிக்கு எழுதிக் கொடுத்து, உதாரண புருசனாக வாழ்ந்து காண்பித்தார். சொல்லப்போனால் அவரது இச்செயல்கள் அனைத்துமே ஒரு இயக்கம் போல் ஆனது.”

“கட்சி உறுப்பினர்களும், கட்சியின் அனைத்து மட்ட ஊழியர்களும் அவரை எப்போது வேண்டுமென்றாலும் பார்க்கலாம் என்பதுதான் சுந்தரையாவின் தனிப்பட்ட குணாம்சமாகும்.”

“தெலங்கானா ஆயுதப் போராட்டம் இனியும் தொடர்ந்து நடத்த இயலாது என்ற அபாயக் கட்டத்தை அடைந்தது. இதில் நூற்றுக் கணக்கான தோழர்களின் வாழ்க்கைச் சம்பந்தப் பட்டுள்ளதால், இந்தப் போராட்டத்தை வாபஸ் வாங்குவது என்பதும், மிகவும் குரூரமான முடிவாகதான் இருந்தது. சுந்தரையாவும், பசவப் பொன்னையாவும் கெரில்லா துருப்பைப் கேட்டு, அவர்கள் சம்மதம் இல்லாது எந்த முடிவையும் எடுக்கக் கூடாது என முடிவெடுத்தார்கள். சுந்தரையா இரண்டு நாட்கள் இரவு பகலாய் அங்கேயே உட்கார்ந்து, அனைத்துக் கெரில்லா துருப்பு தலைவர்களையும் அழைத்து கூட்டம் நடத்தி, அவர்களை, இந்த முடிவை ஏற்றுக் கொள்ளச் செய்தார்.”

“சுந்தரையா பொலிட்பீரோவில் சேரும் படி தொடர்ந்து என்னிடம் பேசி, என்னைச் (ஹரிகிஷன் சுர்ஜித் சிங்) சம்மதிக்க வைத்தார். என்னை மையத்துக்கு மாற்றுவது, பஞ்சாப் இயக்கத்தைப் பாதிக்கும் அல்லது அதற்கு இழப்பாகும் என்று நான் தர்க்கம் செய்தேன். அவர் கீழ்கண்ட ஒரு எளிமையான வாதத்தை முன் வைத்ததின் மூலம், எனது எதிர்ப்பை மட்டுப்படுத்தினார்: ”பஞ்சாபின் புரட்சி என்பது, இந்திய புரட்சியை விட வித்தியாசமானதாகவும், அதை விட்டு விலகியதாகவும் இருக்க முடியாது. அதுபோல பஞ்சாப் புரட்சி என்பது இந்திய புரட்சி வெற்றியடையாமல், அது மட்டும் தனியாக வெற்றியடைய முடியாது.””

(ஹரிகிஷன் சுர்ஜித் சிங்)

“1943-45களில், வங்காளம் இதற்கு முன்னர் கண்டிராதப் பஞ்சத்தால் பாதிக்கப் பட்டிருந்தது. இதனால் பல வங்காளத் தோழர்கள் உடல் நலமற்றுப் போனார்கள். ஆகவே சுந்தரையா ஓய்வு மற்றும் சிகிச்சைக்காக ஒரு முகாமை, மசூலிப்பட்டிணத்தில் துவங்கினார். பல தோழர்கள் ஓய்வு எடுப்பதற்காக, அந்த முகாமிற்கு அழைத்து வரப் பட்டனர். தனது கடுமையான வேலைப் பளுவுக்கும் நடுவே, எப்படி

யாவது கொஞ்சம் நேரம் ஒதுக்கி முகாமிற்கு வந்து, அங்கிருப்பவ்களின் ஆரோக்கியம் பற்றி விசாரித்து விட்டுப் போவார், சுந்தரையா.”

“சுந்தரையா, ரிக்சா வண்டியில் போவதை, உறுதியாக எதிர்த்தார். ஒரு மனிதன் இழுக்க, அதில் ஒருவர் உட்கார்ந்து போவதை, அவரால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. ஆனால் மத்தியதர வர்க்கத்திற்குக் கட்டுப்படியாகக் கூடிய வாடகையில் உள்ள ஒரே வாகனம், ரிக்சாதான். ஆகவே ரிக்சாவில் சென்றுதான் ஆக வேண்டும் என்ற எங்கள் பரிந்துரையை, அவர் கண்டிப்பா ஏற்றுதான் ஆக வேண்டும் எனக் கூறி, நாங்கள் அவரை நிர்பந்திப்போம். அவரும் ஒருவர் மட்டும்தான், ஒரு ரிக் சாவில் வர வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு, அதில் பயணம் செய்வார்.”

“1937ம் வருடம் குளிர்காலத் தொடர். நான்(அனுமந்த ராவ்) கம்மா விடுதியில் தங்கி இருந்தேன். வழக்கமாக நான் அளறயின் உட்புறமாக தாழ் போடாமல்தான் தூங்கச் செல்வேன். ஒருநாள் நள்ளிரவு சுந்த ரையா வந்தார். அவர் யாரையும் எழுப்பவில்லை. அவர் பாய் மாதிரி செய்தித்தாளை விரித்துப் போட்டுக் கொண்டு, வந்த பையைத் தலையணை போல் வைத்துக் கொண்டு, தூங்கிப் போனார். தினமும் காலையில் 4 மணிக்கே விழித்து விடுவது சுந்தரையாவின் பழக்கம். எழுந்ததும் அவர் விளக்கைப் போட மாட்டார். அப்படிப் போட்டால், அது தூங்கும் மற்ற தோழர்களின் தூக்கத்தைக் கெடுக்கும் என்று அஞ்சுவார். அவர் ஏதாவது படிக்க விரும்பினால், வேறு எங்காவது போய்தான் அந்தப் பணியைச் செய்வார்.”

“ஆந்திரபிரதேசம் உபரி அதிகமுள்ள மாநிலம் என்ற அரசின் வாதத்தை அவர் கடுமையாக எதிர்த்து வந்தார். அவர் உணவியல் நிபுணர்களும், மற்ற நிபுணர்களும் கூறிய படி ஒவ்வொரு தனிப்பட்ட மனிதர்களுக்கும் எவ்வளவு தேவை என்பதை கணக்கிட்டு, புள்ளி விபரத்துடன், ஆந்திரபிரதேசம் பஞ்சமான மாநிலம் என்ற உண் மையை, விளக்கினார்.”

“மக்கள் மருத்துவமனை என்பது ஆந்திர பிரதேசத்தில் மட்டும் காணப்படும் விசேசமான குணாம்சமாகும். வங்காளத்தில் கட்சியின் மருத்துவராக பணியாற்றிய ராமச்சந்திர ரெட்டி (சுந்தரையாவின் சகோத ரர்) அந்த மாதிரியான மருத்துவமனைகளை முதன்முதலில் நிருவினார். அவர் இறந்த பிறகும் கூட, மக்கள் மருத்துவமனை தொடர்ந்தது, விரிவடைந்தது, தனக்கு என்று பெயரைச் சம்பாதித்துக் கொண்டது. பல கட்சி மருத்தவர்கள் அதை மாதிரியாகக் கொண்டு மாநிலம் முழுவதும் அந்த மாதிரியான மருத்துவமனையை நிறுவினார்கள். இந்தத் திட்டத் திற்கு, சுந்தரையாவின் மனிதாபிமான எண்ணம்தான் பின்புலமாய் உள்ளது.

“இட்டுகட்டிச் சொல்வது, ஏமாற்றுவது என்பதெல்லாம் தெரியாத அரசியல்வாதி அவர். அவர் எதையும் நேரடியாகப் பேசுவார். ஆனால் இந்தச் சிறந்த குணமே, மக்கள் பிரச்சினைகளை வெவ்வேறு கட்சிகளின் மட்டங்களில் விவாதிக்கும் போது, சில நேரங்களில் பிரச்சினையாகி விடு வதுண்டு. அவர் எளிமையாகவும் நேரடியாகவும் இருப்பவர். மற்ற வர்களும் தன்னைப் போலவே, நேரடியாகவும் உண்மையாகவும் இருப்பார்கள் என நம்புபவர். அவர் பேச்சுவார்த்தை மேஜையில், தன்னிடம் உள்ள அஸ்திரங்களை எல்லாம் போட்டு விட்டு, மிகவும் வெளிப்படையாக தனது கருத்தை வலியுறுத்திப் பேசுபவர்.”

″தான் சொல்வது மக்கள் நலனைப் பிரதிப்பலிப்பதாக உள்ளதாக இருந்தும் எதிரில் உள்ளவர் ஒப்புக்கொள்ளவில்லை என்றாலும், அல்லது எதிரில் உள்ளவர்கள் பேசுவது உண்மைக்குப் புறம்பாக உள் ளது என்றாலும், அவர் அவ்வளவு எளிதில் விட மாட்டார். எதிரில் இருப்பவர் எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும் சற்றும் கவலைப் படாமல், கண நேரத்தில், அவரிடம் முரண்பட்டு பேச ஆரம்பித்து விடு வார். ஒருமுறை ஆந்திரத்தின் பெருந்தலைவர்களில் ஒருவரான பிரகாசம் சோசலிசம் குறித்தும், சோவியத் யூனியன் குறித்தும் உண்மைக்குப் புறம்பாக ஒரு கூட்டத்தில் பேசிக் கொண்டிருக்க, சுந்தரையா உடன டியாக எழுந்து அவர் பொய் சொல்கிறார் என்று கத்த ஆரம்பித்து விட் டார். பிரகாசம் போன்ற பெரும் செல்வாக்குப் படைத்த தலைவரை எதிர்ப்பது என்றால், பெரும் தைரியம் வேண்டும். நாங்கள் அனைவ ரும் பிரகாசம் என்னச் சொல்லப் போகிறாரோ அல்லது என்னச் செய் யப் போகிறாரோ என்று பயந்து கொண்டிருந்தோம். யார் இப்படி மறுத்தப் பேசியது, அவர் வந்து தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று சொன்னதும், சுந்தரையா எழுந்து வந்து, தான் இன்னார் என்றும், பிரகாசம் இங்குச் சொன்னது பொய் என்றும் சொன்னார். பிரகாசம் ஒரு கணம் என்ன பேசுவது என்று தெரியாமல் செயலிழந்து போய் நின்றார். பின்னர் சுந்தரையா பற்றி ஏதோ முனகி விட்டு, தனது பேச்சின் சாரத்தை திசை மாற்றிப் பேசினார்.

“ஒத்துழையாமை இயக்க காலத்தில், கள் இறக்கும் மரத்தை வெட்டுவது, அப்போராட்டத்தின் ஒரு அம்சமாகும். அப்படியான நடவடிக்கையின் போது, நமது மூவ்வர்ணக் கொடியை இருப்ப திலேயே உயரமான கள் மரத்து மேல் பறக்க விட வேண்டுமென்று ஒருவர் கருத்துத் தெரிவித்தார். சுந்தரையா அதைச் செய்வதற்கு முன் வந்தார். கொடியை வாங்கிக் கொண்டு, மரத்து மேல் ஏறத் துவங்கி விட்டார். பாதி மரத்தில் இருக்கும் போது, அவருக்கு கொஞ்சம் தவறி விட்டது. அவரது நெஞ்சில் கீறி இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. அதுவெல்லாம் மூவ்வர்ண கொடியை உயரே பறக்க விட வேண்டும்

என்ற அவரது ஆர்வத்தைக் குன்ற செய்ய முடியவில்லை. இந்தச் செய்தி இங்கும் அங்குமென எங்கும் பரவியது. சுந்தரையாவை மூவர்ணக் கொடியின் மரியாதையையும், கௌரவத்தையும் காப்பாற்றியவர் என அனைவரும் பார்க்கத் துவங்கினார்கள். ஏற்றப் பட்ட கொடி மிகவும் உயரத்தில் இருந்ததால், பிரிட்டிஷ் ஆட்சியா ளர்க்ளுக்கு யாரையும் அனுப்பி அந்தக் கொடியைக் கீழே இறக்கிக் கொண்டு வருவதற்குப் பயமாக இருந்தது. அந்தக் கொடியை துப்பாக்கி வைத்துச் சுட்டு, தீக்கிரையாக்கினார்கள்.”

“கட்சி ஊழியர்களின் மேல் அவர் வைத்திருக்கும் பாசத்தையும் நம்பிக்கையையும் யாரும் அவ்வளவு எளிதில் எழுத்தில் வடித்து விட முடியாது. அவரது சக தோழர்கள் பஞ்சாபில் இருந்தாலும் சரி, வங்கா ளத்தில் இருந்தாலும் சரி, அவர்களது உடல் ஆரோக்கியம் குறித்தும், அவர்களது வீட்டுப்பிரச்சினைகள் குறித்தும், மிகவும் அக்கறையுடன் இருப்பார். ஏதோ அவர்கள் பிரச்சினையைத் தெரிந்து கொள்ள ஆர்வ மாய் இருக்கிறார் என்பதுடன் அவர் மட்டுப்பட்டு போய் விட மாட்டார். பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் அனைத்து முயற்சிகளையும் எடுப்பபார். ஒரு சமயம் நானும் (A.வெங்கடேஸ்வர ராவ்), நந்தூரி பிரசாத் ராவும் மே 14ம் தேதி ஒரு சென்னை மருத்துவ மனையில் அவரது உடல்நலம் பற்றி விசாரிக்கச் சென்ற போது, அவர் முதலில் முந்திக் கொண்டு எங்கள் உடல் நலம் பற்றியும், எங்கள் குடும்பத்தினர் உடல்நலம் பற்றி யும் விசாரிக்க ஆரம்பித்து விட்டார்.”

“சுந்தரைய்யா நெல்லூரைச் சார்ந்தவர். ஆந்திராவில் பேசப்படும் தெலுங்கு மாவட்டத்திற்கு மாவட்டம் சற்று மாறும். யாராவது ஒரு குறிப்பிட்ட வார்த்தையை, நெல்லூர் வட்டார வழக்கப்படி உபயோ கிப்பது சரிதானா என சுந்தரையாவிடம் விசாரித்தால், அப்படிப் பயன் படுத்துவது சரிதான் என்று வக்காலத்து வாங்குவார். அதை உறுதி செய்வதற்குத் தெலுங்கு இலக்கணத்திற்கு வழிகாட்டியான சின்னையா சூரி இலக்கணப் புத்தகத்தில் இருந்த மேற்கோள் காட்டுவார்.”

(M.அனுமந்த ராவ்)

“1946ல், தெலங்கானா போராட்ட துவக்கக் காலக்கட்டத்தில், கெரில்லாக்கள் கொண்டம்பள்ளி காட்டில் பயிற்சி மேற்கொண்டார்கள். பயிற் சியின் போது, துருப்பினர் புதருக்குள் தங்கள் இடத்தில் இருந்து கொண்டு, இலக்கை நோக்கிச் சுட தயாராக ஆனார்கள். திடீரென அங்கு சுந்தரையா வந்தது அனைவருக்கும் இன்பஅதிர்ச்சியாக இருந்தது. அவர் அங்கு அரசியல் சொற்பொழிவாற்ற வரவில்லை. அவரும் கெரில்லா பயிற்சி எடுக்க வந்திருந்தார். அந்த நாள் முழுவதும் அவர்

www.padippakam.com

எங்களுடன் இருந்து, எங்கள் பிரச்சினைகளை புரிந்து கொண்டார். கடைசியாக அவர் அரசியல் நிலைபாட்டை விளக்கி, எங்களை உற்சாகப்படுத்தி விட்டு, அங்கிருந்து சென்றார். இதுபோல் நடப்பது அப்பப்போது நடக்கும் ஏதோ அபூர்வமான நிகழ்வு என்று சொல்லி விட முடியாது. மற்றொரு சந்தர்ப்பத்தில், கெரில்லா துருப்புகளை, இந்திய அரசின் இராணுவம் சூழ்ந்து கொண்ட இக்கட்டான நினலையில், அது இருந்தது. சுந்தரைய்யா கால்சட்டையும், பனியனும் போட்டுக் கொண்டு, எங்களிடம் வந்து சேர்ந்தார். அப்போதைய அரசியல் சூழ்நிலையைச் சொல்லி, அது குறித்து எங்களது கருத்துகளைத் தெரிந்து கொள்ள ஆர்வமாய் இருந்தார்."

"தெலங்கானா ஆயுத போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவது சாத்தியமா என்று கடுமையான விவாதங்கள் கட்சிக்குள் நடந்து கொண்டிருக்கும் போது, சுந்தரையா இராணுவ உபகரணங்களுடனும், ஒரு ரேடியோசெட்டுடனும், தனது தனிப்பட்டச் சாமான்களுடனும், காட்டுக்கு வந்து விட்டார். இதனால் எங்கள் துருப்பில் இருந்த எந்த கெரில்லாவையும் விட, அதிகச் சுமையைத் தூக்க வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டது. அவர் துருப்பிலுள்ள வேறு யாரையும் தனது சுமையைச் சுமக்க, அனுமதிக்க மறுத்து விட்டார்."

"ஒரு சமயம், சுந்தரையாவுடன் 'பதகோன்' காட்டுப் பாதை வழியே நடந்து சென்று கொண்டிருந்தோம். பலவித பாறைகளையும் சிறிய மலையையும் கடந்து செல்லவேண்டி இருந்தது. சுந்தரையா ஒரு மரத்துத் தண்டின் மேல் விழுந்ததால், காயம் ஏற்பட்டு எக்கச்சக்கமாய் இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. நாங்கள் அவருக்கு முதல்உதவி வழங்கினோம். அவரை கண்டிப்பாக ஓய்வு எடுக்க வேண்டுமென்றும், இதற்கு மேல் நடக்கக் கூடாது என்றும் கடுமையாக எச்சரித்தோம். ஏனெனில் ஏற்கனவே அவருக்கு எக்கச்சக்கமான இரத்தம் சேதமாகி இருந்தது. ஆனால் சுந்தரையா எங்கள் அறிவுரையைக் காது கொடுத்தே கேட்கவில்லை. தான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்திற்கு, எப்படியாவது போயே ஆக வேண்டுமென, உறுதியாகச் சொல்லி விட்டார். அவர் இரண்டு துருப்பினரை உதவிக்கு வைத்துக் கொண்டார். 60 கி.மீட்டர் நடந்தே சென்றார். இடையில் இரண்டே இடத்தில்தான் கொஞ்ச நேரம் ஓய்வெடுத்து ஆசுவாசப்படுத்திக் கொண்டார். இத்தனை வலியையும் பொறுத்துக் கொண்டு, தனது இலக்கைச் சரியான நேரத்தில் அடைந்தார்."

"1937ல், மாவட்ட இளைஞர் மாநாடு மசூலிப்பட்டிணத்தில் நடந்தது. மசூலிப்பட்டிணம் வழியாக, குடிவாடா போகும் ரயில், மசூலிப்பட்டணத்தை அடைந்த போது, மதிய உணவு நேரம். ஆனால் மதிய உணவுக்கு எந்த ஏற்பாடும் இல்லை. எங்களுடன் வந்த சுந்தரையா, எங்களில் ஒருவராக இல்லாமல், எங்களது பொறுப்



படிப்பகம்

பாளராய் காரியமாற்ற ஆரம்பித்து விட்டார். அந்த ரயில்வே நிலையத்து நடைமேடையில் கிடைத்த அனைத்து டிபன் பொட்டலத்தையும் வாங்கி, பிரதிநிதிகளுக்குப் பிரித்துக் கொடுக்க ஆரம்பித்து விட்டார்."

"1952ல் இந்தியாவின் முதல் பொதுத் தேர்தல் நடந்த சமயம். கட்சியின் தலைவர்கள் ஒன்று சிறைச்சாலையில் இருந்து வந்தார்கள் அல்லது தலைமறைவு வாழ்க்கையில் இருந்து வந்தார்கள். சுந்தரையா வந்ததும், தெலங்கானா ஆயுத போராட்டத்தில் உயிர் துறந்த தியாகிகளின் வீட்டிற்கு நேராகச் சென்றார். அவர்களது குடும்பத்தி னரைப் பார்த்து, அவர்களுக்கு ஆறுதல் சொன்னார். அவர்களது சோகத் தைப் பகிர்ந்து கொண்டு, அவர்களது நிதி நிலைமையைக் கேட்டறிந்தார். அவர்களுக்குத் தேவையான அறிவுரை வழங்கியதுடன் மட்டுமல்லாது, அங்கிருந்த ஸ்தல தோழர்களிடம் தியாகிகளின் குடும்பங்களின் நலனை உறுதி செய்யுமாறு கேட்டுக் கொண்டதுடன், அவர்களுக்குக் கட்சியின் உதவியையும் பெற்றுத் தருவதாய் உறுதியளித்தார். இப்படியாக அவர் கட்சித் தோழர்களின் மேலும், அவர்களது குடும்பத்தினரின் மேலும், அக்கறையுடன் இருப்பார்."

"1953ல், ஒரு போராட்டத்திற்கு விவசாயிகளைத் திரட்டிக் கொண்டிருக்கும் போது, போலிஸ் என்னைக் கைது செய்து, எல்லூ ருக்கு அழைத்துச் சென்றது. அப்போதுதான் என்னைப் பாம்புகடி நடந் தது. இந்தச் செய்தி கட்சிப் பத்திரிகையில் வந்த போது, சுந்தரையா காத தூரம் தள்ளி இருந்தார். இதைக் கேள்விப் பட்டதும், பதறிப் போன சுந்தரையா, எல்லூருக்குப் பாய்ந்து வந்தார். எனது நிலமையைப் பற்றி அங்கிருந்த டாக்டரிடம் விசாரித்து அறிந்தார். நான் அவரிடம், "இப்படி எல்லா கட்சி வேலைகளையும் விட்டு விட்டு, என்னைப் பார்க்க இவ்வ ளவு தூரம் வர வேண்டிய அவசியம் என்ன?" என்று கேட்டேன். அதற்கு அவர்,"இவ்வளவு முக்கியமான தோழர் ஆபத்தில் இருக்கும் போது, அதற்கு எதிர்வினை புரியாமல், அங்கேயே நான் எப்படி இருக்க முடியும்?" என்று என்னை எதிர்கேள்வி அவர் கேட்டார்."

"ஒருமுறை அவரை நான் கேட்டேன்: "நீங்கள் மிகவும் மகிழ்ச்சியாய் இருந்த, உங்கள் வாழ்க்கையின் முக்கியமான தருணம் எது?" அவரது பதில் என்ன தெரியுமா?: "நான் மாஸ்கோவில் வைத்தியத்திற்காகச் சென்றிருந்த 1964-65ம் வருடத்தின் போதுதான். அப்போது முதல மைச்சராக இருந்த நீலம் சஞ்சீவி ரெட்டி, எனக்கு ஒரு தந்தி அனுப்பி இருந்தார். என்னுடைய வேண்டுகோளுக்கு இணங்கி, தெலங்கானா போராட்டத்தில் பங்கு எடுத்ததற்காக, அப்போது வரைக்கும் சிறையில் இருந்த தலைவர்கள் அனைவரும், விடுதலைச் செய்யப்பட்டார்கள். அந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக, யாரும் இப்போது, சிறைச்சாலையில் இல்லை என சஞ்சீவி ரெட்டி, எனக்குத் தெளிவாக தெரிவித்து இருந்தார். எனது அனைத்து கடமைகளையும் நிறைவேற்

றியமைக்காக, அன்றைய நாள்தான் நான் மிகவும் சந்தோசமாக இருந்த நாள்.” “

“ஒருமுறை சுந்தரையா சொன்னார்: வேலைநிறுத்தமும், ஒருவகையில் பிளாக்மெயில்தான். தொழிலாளர்களுக்கு, தங்கள் சம்பளத்தை உயர்த்தி கேட்பதற்கு, வேலைநிறுத்தம் செய்யும் உரிமை இருக்கதான் செய்கிறது. ஆனால் அதே நேரத்தில், தொழிலாளர்களும் கடினமாக உழைப்பது என்பதையும், உற்பத்தியை உறுதி செய்வது என்பதையும், சரியாக நடைமுறை படுத்த வேண்டும். ஒருமுறை கம்யூனிஸ்ட்கள் ஆட்சி புரியும் மேற்கு வங்கத்தில், தன்னார்வ தொண்டு நிறுவனத்தினர் சிலர், பல நாட்களாக வேலைக்கே செல்லவில்லை. தொழிலாளர்களும் தங்கள் வேகைகைள உருப்படியாகச் செய்யவில்லை. இது கண்டிப் பாக தவறு. நாம் கம்யூனிஸ்ட்கள் தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஆதரிக்கும் போது, நாம் அவர்களை வேலையைத் தப்பாக செய்ய லாகாது என்றும், சாகவாசமாகவோ வேலையைச் செய்யலாகாது என்றும் எடுத்துரைக்க வேண்டும். இப்படிச் செய்வதால் ஒன்றும், நமது இயக்கத்திற்கு எந்த வகையிலும் தீங்கு வந்து விடாது. நாமும் நிர்வாகத்தைப் போல், அவர்களை விமர்ச்சிக்கிறோம் என்று அஞ்ச வேண்டியதில்லை. இந்த மாதிரியான விமர்சனங்களால் நமது இயக்கம் ஒன்றும் வலுவிழந்து விடாது. அதற்குப் பதில், அனைவரும் நமது ஆத்மார்த்தமான தலைமைப் பொறுப்பை உணர்ந்து கொண்டு, தங்கள் ஒத்துழைப்பை நல்குவார்கள்.”

V.R.பொம்மாரெட்டி

#######